
சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

30




ஆசிரியர்: மு.தயாளன் | இதழ் 30 தை 2022 | £4.00 / 100Rs

வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 |

| | | | | |
|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | சு. ஆர்த்திகா |
| 300Rs/£4 | 300Rs/£4 | 400Rs/£4 | 400Rs/£4 | 500Rs/£4 |

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro
மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து 20% கழிவில் பெறலாம்

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்

எனது எல்லாப் புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

**இது வரை எந்தப் புத்தகமும் வெளியிடாது முதல் புத்தகம் வெளியிடவிரும்பும் இளம் எழுத்தாளர்கள் (சிறுகதை, நாவல்) விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.** luxmi2128@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட வருவன...

காலத்தோடு சேர்ந்து மாறுதலடையவேண்டிய நிர்ப்பந்தம் சிறுகதை மஞ்சரிக்கும் ஏற்பட்டுள்ளது. தன் உருவத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்து நெடு நாள் வாழ்வதற்கான அடியை மஞ்சரி எடுத்து வைத்துள்ளது. உலகத்தில் வாழும் மக்கள் யாவரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்பதற்கான உணவினை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. எதை எடுத்தாலும் முன்னைய விலையைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு விலை என்றவாறு விலை உயர்வுகள் கோர தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன.

இதன் விளைவாக மனிதன் தன் இயல்பான மனிதாபிமான நிலையைவிட்டு மற்றவர் உணவைப் பறித்துண்ணும் நிலை வரும் வேளை மிக அருகில் வந்துவிட்டது.

ஒன்றைக் கொடுத்து இன்னொன்றை வாங்கும் பண்டமாற்று நிலைமைகூட மிக அருகில் வந்துவிட்டது.

அரசியல் பேசுபவர்களும் உலகத் தலைவர்களும் இந்த நிலைகளைப்பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்கள் இருப்பைப் பாதுகாப்பதற்காகச் சப்பைக் காரணங்களைச் சொல்லிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கண்டுபிடித்த உயிர் கொல்லி ஆயுதங்களைக் கொண்டு தங்களையும் மக்களையும் கொல்வதில் குறியாக இருக்கிறார்கள்.

உணவுக்கே திண்டாடும் மனிதன் இலக்கியத்தைப்பற்றி எப்படிச் சிந்திப்பது? இலக்கியம் அவனுக்குச் சோறு போடுமா? தத்துவங்கள் அவனுக்கு என்ன தரப்போகிறது?

ஆனால் கொடிய வறுமை வந்து உயிரைக் கொன்று கொண்டிருக்கும் போதும் கார்ல் மாக்சின் கரங்கள் ஓயவில்லை என்பதை மறந்து விடாதீர்கள். இரவும் பகலும் அவரது கரங்களும் மூளையும் உலகம் உய்வதற்கான மூலதனம் என்ற புத்தகத்தை தந்துவிட்டுத்தான் ஓய்ந்தன.

ஆகவே படிப்பதை மட்டும் விட்டுவிடாதீர்கள். எல்லாம் அழிந்த பின்னும் நீங்கள் வாழ்ந்தால் நீங்கள் படித்தவை மட்டும்தான் உங்களோடு இருக்கும்.

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...

1 கூட வருவன

2 உள்ளடக்கம்

3 படிப்பும் பாதிப்பும்
அலெக்ஸ் பரந்தாமன்

6 கைவரிசை
ஷெல்விதாசன்

13 ஒருபிடி மண்( சிறப்புச் சிறுகதை)
ஐ.சாந்தன்

16 பொறிக்கிடங்கு
தாமரைக்கேணி கு. குணறுபேஸ்

21 கரும்பலகை - தொடர்கதை
மு.தயாளன்

24 யாவும் கற்பனையல்ல
செங்கதிரோன்

29 பெற்றால்தான் பிள்ளையா
அகரா

34 மாயவிடம்
பிரசாந்தி ஜெயபாலன்

38 மஞ்சரி 29 ஒரு பார்வை
பேராசிரியர் செ. யோகராசா

40 சிறுகதை எழுதுவதெப்படி?
மு. தயாளன்

**விநியோகம்:**

யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் ,
+94 773788795

மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின்
+94 774338878

திருகோணமலை: த. சரண்யா, +94765554649

### அன்பான வேண்டுகோள்.

*நீங்கள் படைப்புகளை அனுப்பும்போது உங்களின் முகவரி, படம், வங்கிவிபரம் உங்களைப்பற்றிய இலக்கியப் பிரவேசம் சம்பந்தமான குறிப்பு ஆகியவற்றை அனுப்பி வைக்கவும். ஆ-ர்*

**சிறுகதை மஞ்சரி 29 இன் சிறந்த இரு சிறுகதைகள்**

1. கள்ளத்தோணி - சுரேந்திரன் தர்சித்
2. செல்வம் - விமல் பரம்

**நன்றிக்குரியவர்கள்:**

திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்,

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்

**அட்டைப்படம்** : பிரியா தங்கவேல்

**ஓவியர்கள்:** G. கைலாசநாதன்

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்

**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்

**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்

**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா

**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**சந்தா விபரம்:**
**Srilanka**:900Rs/Year
Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பும் பாதிப்பும் 2

கதை: தானம்
ஆசிரியர்:
புலோலியூர் இரத்தினவேலோன்
(மல்லிகை 1981)

வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்பவர். சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம் என பல தளங்களில் இயங்குகின்ற படைப்பாளி இவர். வாசிப்பதன் மூலம்தான் படைப்பாளி தன்னைப் புடமிட முடியும் என்று முழுதாக நம்புகின்ற படைப்பாளி. சிறுகதைமஞ்சரியின் ஆஸ்தான படைப்பாளிகளில் ஒருவர்.



அலெக்ஸ் பரந்தாமன்

ஆலயம் என்பது இறைவன் குடிகொள்ளும் இடமாகக் கருதப்பட்டாலும், மனிதவாழ்வியலை மேம்படுத்துவதற்கும், மனிதர்கள் அந்த மார்க்கத்தினூடாக ஒழுக்க சீலராக வாழ்வதற்கும் அமைக்கப்பட்டதொன்று. எமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்தம் கடவுளர்மீது மிகுந்த பயபக்தி கொண்டவர்களாக இருந்தனர். வாழ்வதற்கான நெறி முறைகளும் அதனுள் அடங்கியிருந்தன. ஆலமரங்கள், அரசமரங்கள், புளியமரங்கள், வேப்பமரங்கள்.. போன்ற வற்றின் கீழ் ஒருசிறு தகரக் கொட்டகையாக ஆலயங்கள் விளங்கின.

இவ்வாறாக இருந்த ஆலயங்களுள் ஒருவித சக்தி இருந்தது. அந்தச்சக்தி வாழும் மனிதர்களை நல்வழிப்படுத்தியது. அடியவர்களின் மன அச்ச உணர்வினையும் அகற்றி வைத்தது. நாளடைவில்...

மனிதர்கள் தம் பிரயாசையினால் தேடிக் கொண்ட பணத்தாலும், பொருளீட்டலினாலும் தகரக்கொட்டகைகளாக இருந்த வழிபாட்டுத்தலங்கள் எல்லாம் மெல்ல உருமாறத் தொடங்கின. கூடவே மனிதர்களது குணத்திலும் இறைமீது கொண்ட பக்தியிலும் இருள்படியத் தொடங்கின.

முச்சந்திகள் மற்றும் தனிநபர் வளவுகளில் சிறுகுடில்களாக அமையப் பெற்ற இவ்வழிபாட்டிடங்கள் பலவும், ஒன்று சேர்ந்த குழுக்களின் கரங்களுக்குள் உரித்துடமையான பின், ஆலயங்கள் ஆன்மிக நெறியிலிருந்து வழிதவறத் தொடங்கின. ஆகம வேதங்களுக்கு அப்பால் அவை 'வர்த்தக வாணிபம்' ஆகச் செயற்பட முனைந்தன. ஆலயங்களுக்கு உரித்தானவர்களின் அகமனதுள் பணத்தாசை ஆழ வேரோடியதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவு... ஆன்மிக ஒழுக்க முறைகள் சிதிலமடைய ஆரம்பித்தன. இதனால் வறுமைப்பட்டவர்கள் உருவாகத் தொடங்கினார்கள். ஆடம்பரமாக நிமிர்ந்து நின்ற ஆலயங்களுக்குள், இவர்கள் செய்யும் தொழில்ரீதியான சாதி முத்திரை குத்தப்பட்டு, பொருளாதார ரீதியாகப் பின்நிலைப்படுத்தப்பட்டனர்.

இதிலே முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவிடயம் என்ன வெனில், ஆலயங்களில்வழங்கப்படுகின்ற அன்ன தான நிகழ்வாகும். அன்னதானம் வழங்குவதற்கு, மடங்கள் கட்டி, அந்த மடங்களின் மூலம் தனிமனிதர்கள் தேடிக் கொள்ளும் தமக்கான சுகமும் சுயநலனும் காட்டுமிராண்டித்தனங்களும் மிகக் கனதியானவை. ஆலயமடங்களில் அன்னதானம் வழங்கப்படுவதானது... விதவைகள், திக்கற்றவர்கள், உடல்நிலை இயலாதோர், யாசகர்கள்... போன்றோர் ஒரு நாளில் ஒருநேரமாவது வயிறார உண்ண வேண்டுமென்பதற்காகவே. ஆனால், ஆலயத்தின் பெயரால் வழங் கப்படும் அன்னம், ஒருவகையில் அது எங்ஙனம்... எப்படி... எவருக்காக... வழங்கப்படுகின்றது? என்பதை புலோ லியூர் இரத்தினவேலோன் அவர்கள் தனது 'தானம்' எனும் சிறுகதை (மல்லிகை - 1981. புதிய பயணம் சிறுகதைத்தொகுப்பு) மூலம் தோலுரித் துக் காட்டுகிறார்.

வழக்கம்போன்று ஓர் ஆலயத்தில் அன்னதான நிகழ்வு நடைபெறுகிறது. அந்த ஆலயத்தில் யாருடைய அன்னதான நிகழ்வு நடந்தாலும், அருணாசலம் என் பவரே முன்னின்று நடத்தி வைப்பார். அன்றும் அவரது மைத்துனர் முருகேசரின் தானம் என்பதால், மும்முரமாக இயங் கிக் கொண்டிருக்கிறார். தானம் வழங் கும் நிகழ்விலும் சமூகத்தில் பின்னிலைப் படுத்தப்பட்டவர்கள் எனக்கூறப்படும் அவர்களுக்காக ஆலயத்தில் உள்ள ஒரு தேக்க மரத்துக்குக் கீழே ஒதுக்கப்பட் டிருக்கிறது ஓர் இடம். அவர்களில் ஒருவனாக நிற்கிறான் செல்லன். இவன் ஒரு சலவைத் தொழிலாளி. மூன்று பிள்ளைகளுக்குத் தாயான இவனது மனைவி, ஏற்கனவே மாரடைப்பினால் இறந்துவிட்ட நிலையில், துறையில் (குளத்தில்) துணிகளை வெளுத்துக் கொண்டு, வீடு திரும்புகிறான். ஆலயத் தில் தானம் வழங்கப்படுவதை அறிந்து, தமக்கான மூடல்பெட்டிகளோடு, மூன்று பிள்ளைகளையும் அழைத் துக்கொண்டு, ஆலயத்துக்கு விரைகிறான்.

மண்டபத்துக்குள் பந்தி நடைபெற் றுக் கொண்டிருக்கிறது. நேர நகர்வில்... "ஐயா எங்கட பந்திக்கு இன்னமும் ஏன் ஒருத்தரையும் விடேல்லை.?" என்று செல்லனின் இளையமகள் கேட்பதனூ டாகவும், அதற்குச் செல்லன் "கடை சியாத் தான் மோன விடுவினம்..." என்று அவன் கூறுவதனூடாகவும் ஒருகவளம் சோற்றுக்கான காத்திருத்தலையும், கடை நிலைக்குத் தள்ளப்பட்டு நிற்கும் ஒரு வர்க்கத்தையும் ஆசிரியர் தன் எழுத்து களினூடாக வெளிக் கொணர்வது வெகுசிறப்பு! அத்தோடு, படையல் சோற்றை பூசைக்குரியவர் வீட்டை கொண்டு போவதைக் கண்ட செல்லனின் மகள், அதுகுறித்து அவனிடம் கேட்கும் கேள்விக்கு, செல்ல னின் பதில்... வாசக னின் மனதில் அடிகளாக விழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தில், பரம்பரைப் பொருள் வளத்தில் நிறைவோடு வாழும் மேட்டுக்குடி வர்க்கத்தினரின் ஆலயங்களில் நடத்தப்படும் அன்னதான நிகழ்வானது, ஒரு சம்பிரதாயச் சடங்கு போன்றதென்ப தையும், அந்தத் தானம் உரியவர்களுக்கன்றி தமது உற்றம் சுற்றம் அனைவரும் உண்டு மகிழ்வதற்கே... என்பதையும் பந்தி நடை பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், அருணாசலம் என்பவருடாக ஆசிரியர் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

"தம்பி... பக்கத்தில எண்ர மருமோள் பொடிச்சி இருக்கிறா... பாத்து எண்ர பங்கையும் அந்த மூடலுக்கை வை.."

சோறு முடிவடையும் கட்டத்தில் பந்தி குழம்புகிறது. சோறு வைத்துக் கொண்டிருந்த வேலோன் என்பவனின் பார்வை, செல்லன் போன்றோர் நிற்கும் பக்கம் திரும்புகிறது.

"வேலோன் பெட்டியை இஞ்சை கொண்டா..." அருணாசலம் வேலோனிடம் வேண்டுகோள் விடுக்கிறார். வேலோன் தேக்கமரப்பக்கத்தை நினைவூட் டுகிறான்.

"சோறு மட்டுமட்டு..." என அருணாசலம்கூற,

"அப்ப அதுகள்சோறு வாங்காமலே போறது...? அண்ணை தானமெண்டால் தானமாயிருக்க வேணும். எல்லோருக்கும் குடுத்திட்டு, அதுகளுக்கு...? பந்தியில சோறு வைச்சவைக்கும் காய்கறி அரிஞ்சு பாடுபட்டவைக்கும் சோறுபோட வேணுமெண்டால், நீங்களெல்லாரும் வீட்டை கூடியிருந்து, ஒரு பெரிய விருந்தை வைச்சிருக்கலாம். இதுகளைப்போல ஒருவேளை சோத்துக்காக அவலப்படுகிற சனங்களுக்கு ஒருநேரமாவது சோறு போடுறதுக்குத்தான் அன்னதானம் குடுக்குறது. அண்டை அயலார் எல்லாம் கூடிவந்து, அவிச்சுப் போட்டு புறிச்சு வீட்டை கொண்டு போறதுக்கில்லை பூசை குடுக்கிறது. வீட்டிலை நெல்லு மூட்டை நிரம்பியிருக்கிறவைக்கு பெட்டி பெட்டியாய் சோறு அனுப்புறியளே... அதிலென்ன புண்ணியம் கண்டியள்? அன்னதானம் குடுக்கினமாம் அன்னதானம்..." வேலோன் கூறியதைக் கேட்டு, கடுப்பாகின்றனர் அருணாசலமும் முருகேசரும். எஞ்சிய சோறுகறிகளும் முருகேசரின் கார் டிக்குக்குள் சங்கமமாகின்றன. கார் புறப்படுகிறது.


செல்லனின் இளவயதுபிள்ளை பசியில் அழ ஆரம்பிக்கிறது. தேக்கமரத்தடியில் இருந்தவர்கள் மடப் பள்ளியை நெருங்குகிறார்கள். அவர்களில் கதிரன் என்பவனும்ஒருவன். அப்போது செல்லன் கதிரனைப் பார்த்துக் கூறும் ஒவ்வொரு கூற்றும் வெஞ்சினத்தின் வெளிப்பாடாகவும், பின்னிலைப்படுத்தப்பட்ட ஒவ்வொருவரின் மனதிலும் பதிவாக வேண்டியவையும் ஆகின்றன.

ஆலயங்களில் நடைபெறும் தானம் எனும் நிகழ்வுகளின் மறுபக்கத்தின் அசிங்கத்தனமான ஒரு முகத்தை, தனது பேனாவின் நுனிமுனை கொண்டு கிழித்து, அம்பலப் படுத்திவிட்டதில் ஆசிரியர் இரத்தின வேலோன் பாராட்டுக்குரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவரிசை






**ஷெல்லிதாசன்**

"என்ன மாமி வீட்டை விடியக் காலமை வந்திருக்கிறியள்... வாங்கோ உள்ளை வாங்கோ...." என தனது வீடு தேடி விடிகாலைப் பொழுதில் வந்த கனகம் மாமியை மனோ கரி வரவேற்றாள்.

"என்ன மாமி என்ன பிரச்சினை"

"எனக்கென்ன பிரச்சனை பிள்ளை" இண்டைக்கு உப்புவெளிச் சந்திப் பிள்ளையார் கோயிலடியிலை காஸ் குடுக்கிறாங்களாம் பிள்ளை நீ அறிஞ்சனியே"

"இல்லை மாமி. உங்களுக்கு ஆர் சொன்னது"

"அதுவோ எங்கடை சித்திரவேலு மாஸ்ரர்தான் வீட்டை வந்து சொல்லீட்டுப் போனவர் பிள்ளை."

"அவர் சொன்னால் உண்மையாத்தான் இருக்கும் மாமி"

"நீ அங்கை போக வாறியோ"

"ஓம் மாமி.... கட்டாயம் வாறன் மூண்டு மாதமா நான் காஸ் இல்லாமல் படுறபாடு..."

மனோகரி இப்ப மூண்டு மாத காலமாக ஒரு காஸ் சிலிண்டரை வாங்க அல்லாடுகிறாள் ஆனால் பாவி போற இடம் பள்ளமும் திட்டியும் என்பதுபோல போன இடங்களெல்லாம் ஏமாற்றந்தான். வெற்றுச்சிலிண்டரோடுதான் வீடு வந்து சேர்ந்திருக்கிறாள்.

அன்புவழிபுரத்திலை ஒரு வாடகை வீடுதான் அவளது குடியிருப்பு. இரட்டைத் தட்டு வீட்டில் மேல்மாடியில்தான் அவள் குடியிருந்தாள். பன்னிரண்டு வயதில் ஒரு மகனும் பத்து வயதில் ஒரு மகளும் அவளுக்குப் பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரியின் கணவன் விமலன் கொழும்பில் ஒரு தனியார் கம்பனியில் பணிபுரிகிறான். மாதம் ஒருக்கா வீட்டுக்கு வந்து போவான் அவ்வளவுதான். அதனால் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்



புவது, ரியூசன் வகுப்புக்கு கொண்டுபோய் விடுவது, வீட்டு வேலைகளெல்லாம் அவள் தலையில்தான். கணவன் விமலனின் வயதான தாயைப் பராமரிப்பதும், நோய்வந்தால் ஆஸ்பத்திரிக்கு அலைவதெல்லாம் அவள்தான்.

ஆனாலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு அவளை பெரிதும் பாடாய்ப்படுத்தியது. அவளின் உந்துருளிக்கு எரிபொருள் அடிக்க சிலவேளை பிள்ளைகளை மாமியுடன் விட்டுவிட்டு இரண்டு நாட்கள் கூட தெருவிலை கியூவிலை நிண்டிருக்கிறாள் பாவம் ஆற்றை உதவியும் கிடையாது.

அத்துடன் காஸ்தட்டுப்பாட்டால் பலவேளை சமைக்க முடியாது திண்டாடியுள்ளாள். வசிப்பது மேல்மாடி என்பதால் அடுப்போ, புகைபோக்கியோ கிடையாத நவீன வீடு அது. அதுவும் வாடகை வீடெண்டா வேறை வினை வேண்டாம்.

இந்த காஸ் தட்டுப்பாட்டைச் சமாளிக்க கணவன் விமலன் கொழும்பிலிருந்து வரும் போது எட்டாயிரம் ரூபாவுக்கு ஒரு மண்ணெண்ணை அடுப்பு வாங்கி வந்து மனைவிக்குக் கொடுத்திருந்தான். ஆரம்பத்தில் மண்ணெண்ணை ஒழுங்கா கிடைத்ததால் மனோகரி சமாளித்துக் கொண்டு போனாள். ஆனால் இப்போ மண்ணெண்ணைக்கே தட்டுப்பாடு. மருந்துக்கும் கிடையாது. அப்படி வாங்கிறதெண்டா லீற்றர் ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவுக்கு மேலாக இருந்தது. அதுவும் கண்ணிலை தென்பட்டால் மட்டும் சாத்தியமாகும்.

மின்சாரத்தில் இயங்கும் கேத்தல், ரைஸ்குக்கர், மின்சார அடுப்பெல்லாம் அவளிடம் இருந்தது. ஆனால் வாடகை வீடென்பதால் கீழ் வீட்டில் குடியிருக்கும் வீட்டு உரிமையாளரின் நிபந்தனையின் படி கண்டபடி மின்சாரம் பாவிக்கப்படாது என்ற கட்டுப்பாடு. கீழ், மேல் வீடுகளுக்கு ஒரே மின்சாரமானிதான். அதிகம் பாவித்தால் கரண்ட் பில் ஐயாயிரம் பத்தாயிரமென பாயுமென கீழ் வீட்டில் குடியிருக்கும் வீட்டு உரிமையாளரின் எச்சரிக்கை வேறை அவளை பயமுறுத்திக் கொண்டிருந்தது. "ஆண்டவா ... முருகா... வாழ்க்கையிலை எத்தனை தொல்லையிலிருந்து பெண் தப்ப வேணும். மாமியை ஒழுங்கா கவனிக்கேல்லை, ஒழுங்கா சாப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுக்கவில்லை எண்டு கணவனின் ஏச்சும் பேச்சும் ஒருபுறம். பள்ளிக்கு போற பிள்ளைகளுக்கு காலை விரைந்து சமைத்துக் குடுத்து பள்ளிக்கு அனுப்ப வேண்டுமென்ற கெடுபிடிகளில் அகப்பட்டு மனோகரி தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில்தான் கனகம் மாமி சொன்ன செய்தி அவளைத் தெம்படைய வைத்தது.

கனகம் மாமியும் மனோகரியைப் போலவே காஸ் எடுக்கத்திரிஞ்சே களைத்துப் போனவள். அவளது வீட்டில் அடுப்பு இருந்தது. ஏன் புகைக்கூடும் இருந்தது. ஆனால் போன வருஷம்தான் வீட்டை நவீனப்படுத்திற வேலையில் இறங்கின மாமி அடுப்புப் புகட்டையும், புகைபோக் கியையும் உடைத்து நவீன பாணியில் வீட்டை புனரமைப்பு செய்து கொண்டாள். இப்ப தன்ரை முட்டாள் வேலையை கனகம் மாமி நொந்து அழுதாலும் என்ன பயன்.

"என்ன பிள்ளை மனோ எனக்கும் காஸ்தேவையடி வாறியோ நேரத்தோடை போவம்?"

"ஓம் மாமி நேரத்தோடை போனாத்தான் முன்னுக்கு நம்பர் எடுக்கலாம்" என்றவள் கனகம் மாமியை கெதியிலை வெளிக்கிட்டு வரச்சொல்லி தானும் ஆயத்தமானாள். தனது இரு பிள்ளைகளுக்கும், மாமிக்கும் அவதி அவ தியாய் பாண் வாங்கி வைச்சு சாப்பிடுங்கோ எனச் சொல்லிவிட்டு மேல்வீட்டிலிருந்து சுமக்க முடியாது சிலின்ரரை சுமந்தபடி படிகளால் இறங்கி வாசலுக்கு வந்தாள். கனகம்மாமியும் வெற்றுச் சிலிண்ரருடன் மனோகரி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். நேரம் காலை ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. இருவரும் ஓட்டோவுக்காகக் காவலிருந்தனர். ஓட்டோக் களையே தெருவில் காண முடியவில்லை. மனோகரியும், மாமி யும் தமக்குத் தெரிந்த ஓட்டோக்காரருக்கும் தொலை பேசி அழைப்புகள் எடுத்தும் எந்தவிதப் பலனும் கிடைக்கவில்லை.

"என்னடி புள்ளை நேரம் போகப் போக அங்கை சனமெல்லே குவியப் போகுது."

"ஓம் மாமி பொறுங்கோ தூரத்திலை ஒரு ஓட்டோ வருது மறிச்சுப் பாப்பம்" எண்ட மனோகரி வருகின்ற ஓட்டோவுக்கு பலமுறை கையைக்காட்டி மறித்து விட்டாள்.

ஓட்டோ சாரதி சற்று வயதானவர் என்ற காரணத்தால் அவருக்கு இரக்கம் வந்ததோ என்னவோ தெரியாது ஓட்டோவை அவர்களுக்கு அருகிலே கொண்டு வந்து நிறுத்தினார்.

"ஐயா... நாங்கள் உப்பு வெளிச் சந்திக்கு காஸ் எடுக்க அவசரமாக போக வேணும் மாட்டேண்டாமல் எங்களை ஏத்திக் கொண்டு போங்கோ" என மனோகரி ஓட்டோக்காரரைப் பார்த்துக் கெஞ்சினாள்.

ஓட்டோச்சாரதிக்கு அவர்கள் படும் பாட்டைக் காண இரக்கமாயிருந்தது.

" பிள்ளை... இங்கை அன்பு வழிபுரத்திலையிருந்து உப்பு வெளிச்சந்திக்கு போறதெண்டா எப்படியும் ஐஞ்சாறு கிலோமீற்றர் ஓடவேணும். நீங்கள் ஆயிரம் ரூபா தாறெண்டா கொண்டு போய் விடுறன். நானும் பெற்றோலுக்கு பல நாளா காவலிருந்துரண்டாயிரத் ஐந்நூறுக்குத்தான் ஒரு லீற்றர் பெற்றோல் வாங்கி ஒரு அவசரத்துக்கு தேவையெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டோவிலை அடிச்சு வைச்சிருக்கிறன். விரும்பினால் ஆயிரம்ரூபா தந்தா கொண் டே விடுறன். இல்லை என்னை விடுங்கோ நான் போறன்" என்றார் ஆட்டோக்காரர்.

"சரி பிள்ளை ஆளுக்கு ஐந்நூறு தானே போவம் பிள்ளை. அவர் சொல்லு றதிலையும் ஞாயம் இருக்கு. சரி ஏறு பிள்ளை, என மாமி சொல்லிவிட்டு தனது சிலிண்ரறை ஓட்டோவில் ஏற்ற மனோக ரியும் தனது சிலிண்ரருடன் ஓட்டோவில் ஏறி உப்பு வெளிச்சந்திக்கு விரைந்தனர்.

காஸ் விநியோகிக்கும் இடத்தை ஓட்டோ சென்றடைந்ததும் அதிலிருந்து அவசரமாக இறங்கிய இருவரும் சாரதியி டம் பணத்தைக் கொடுத்துவிட்டு நின் றிருந்த வரிசையை அவதானித்தனர். அதற்கிடை யில் பெரும் வரிசையில் சனம் இணைந்து கொண்டு காவலிருந் தனர். மனோகரியும் மாமியும் கடைசியா கப் போய்நின்று அப்பாடா என பெரு மூச்சு விட்டனர். சற்று நேரத்தில் ரோக் கினை கொடுப்பவர் இவர்களுக்கருகில் வந்து இவர்களுக்குரிய இலக்கத்தைக் கொடுத்தார். மனோகரிக்கு ஆயிரத்து ஐந்நூற்று அறுபதும், மாமிக்கு அறுபத் தொண்டும் கிடைத்தது. சற்று நேரத்தின் பின் இவர்களுக்குப் பின்னாலேயே நூறுக்கு மேல்சனம்வரிசையில்இணைந்து கொண்டிருந்தனர். மொத்தமாக ஆயி ரத்து எழுநூற்றி ஐம்பது பேருக்கு சிலிண் டர் விநியோகிக்கப்படுமென்பதால் அதற்கேற்றவாறு ரோக்கின் இலக்கமும் வழங்கப்பட்டிருந்தன.

மனோகரியும், கனகம் மாமியும் தமது இலக்கத்தையிட்டு பெரும் நம் பிக்கையுடன் இருந்தனர். எப்படியும் கிடைக்குமென தமது களைப்பையும் பொருட்படுத்தாது காலுழைய காவலி ருந்தனர். நேரம் நடுப் பகலை அண்மிக்க அண்மிக்க வெய்யில் அனலாய் கொட் டியது. சனமெல்லாம் அந்த வெய்யி லுக்குள் காவலிருந்தும் காஸ் கொடுப் பதற்கான எந்த அறிகுறியையும்காணோம். சில தாய்மார்கள் தமது கைக் குழந்தைக ளுடன் வந்திருந்தனர். பசி, தண்ணீர் தாகத்தால் அந்தக் குழந்தைகள் பலமாக அழுது குழறிக்கொண்டிருந்தன. வயது முதிர்ந்தவர்கள் பலர் நிலத்திலே குந்தியி ருந்தும் சிலர் நிலத்தில் சாய்ந்து படுத்தும் கிடந்தனர். இடைக்கிடை வடை விக்கிற வியாபாரிகளும், தண்ணீர் போத்தில், ரொபி, கடலை விற்பவரும் சந்தர்ப்பத் தைப் பார்த்து தமது வியாபாரத்தில் மும்முரமாக இருந்தனர். மட்டுமட்டாய் சிலிண்டருக்குரிய காசைக் கொண்டு வந்த பலர் அவற்றை வாங்கியவர்களைப் பார்த்து ஏங்கியவாறு நிற்க, சிலர் தாம் வாங்கிய தண்ணீர் போத்தல்களையும், பண்டங்களையும் பிறருக்கு கொடுத்து பசி, தாகத்தைப் போக்கிக் கொண்டிருந்த உருக்கமான காட்சிகளும் அரங்கேறிக் கொண்டிருந்தன.

நேரம் பிற்பகல் நாலு மணியளவில் இருந்தாற்போல் ஒரு குட்டி மழைசோ வெனப் பொழிந்தது. சிலர் ஓடிப்போய் கடைகளின் தாவாரங்களின் கீழும் மரங்களின் கீழும் ஒதுங்கிக் கொண்டனர். இதற்கு மேலாக இயற்கை உபாதைகளால் பலர் போவதும் வருவதுமாக நிலை மையை சகித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் என்னடா ஒரு வாழ்க்கை என அழுது குழறத்தோன்றும். நேரம் மாலை ஆறு மணியைத் தாண்டிக் கொண்டிருந் ததால் இருள் மெல்ல கௌவ ஆரம்பித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. இப்படியே நேரம் போகப் போக சனத்தின் பொறுமை கட்டுமீறி விநியோகத்தர்களை திட்டிக் கொண்டிருந்தனர். சுமார் எட்டு மணியளவில் காஸ் விநியோகம் செய்யும் பெரிய லொறியொன்று அந்த இடத்திற்கு வந்து நின்றது. சனங்களின் முகத்தில் ஒளிக்கீற்று. உடனடியாக விநியோகமும் ஆரம்பமானது. மெல்ல மெல்ல வரிசை முன்னேறிக் கொண்டிருந்தது. விநியோகம் ஆயிரத்தை தாண்டிக் கொண்டிருந்ததைப் பார்த்த மனோகரி

"மாமி எங்களுக்கு கெதியிலை கிடைக்கும் போல கிடக்குது. கடவுளே இவ்வளவு நேரம் காவலிருந்து ஒரு சிலிண்டர் எடுக்க வேண்டி யிருக்கிற எங்கடை தலை விதியை எப்படி நோக" என தனது மனக் கவலையை கனகம் மாமியிடம் அவள் வெளிப்படுத்தினாள். இரவு நேரம் ஒன்பதை தாண்டிய வேளை விநியோகம் ஆயிரத்து ஐந்நூறை நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென ஒரு உயர் அதிகாரி அங்கு வந்து "ஆயிரத்து ஐந்நூறு பேருக்குரிய சிலிண்ரர்தான் எங்களுக்கு விநியோகிக்க வந்திருப்பதால் தயவு செய்து அதற்கு மேற்பட்ட இலக்கமுள்ளவர்கள் வீணாக மினக்கெடாமல் செல்லுங்கள்" என வந்து சொல்லிவிட்டு போனார். மனோகரிக்கும் மாமிக்கும் ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப்போச்சு. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாத நிலை. மனோகரி அறுபது இலக்கத் தாலையும் கனகம்மாமி அறுபத்தொன்றா வது இலக்கத்தாலையும் பின்னுக்கு நின்றனர்.

முடிவில் ஆயிரத்து ஐந்நூறு பேர்களுக்கு மாத்திரம் காஸ் விநியோகம் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டது. எடுத்தவர்கள் கலைந்து செல்ல எடுக்காதவர்கள் எப்படியாவது தமக்கு கிடைக்கலாமென்ற வேணாவில் அங்கேயே காத்திருந்தனர். ஆனால் நேரம் பத்து மணியை நெருங்குவதால் தெருவில் சனப்பிளக்கம் குறைய தொடங்கி இருள் அதிகரித்துக் கொண்டிருந்தது. நின்ற சனம் தாம் கொண்டு வந்த வெற்றுச் சிலிண்டர்களுடன் கலைந்து சென்று கொண்டிருந்தனர். மனோகரிக்கு அதன் பின்பு காஸ் கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றவளாய்

"மாமி பாரன் இவ்வளவு நேரம் எங்களை களைக்க களைக்க பசியோடை களைப் போடை நிக்கவைச்ச படுபாவியளை கண்டா உதைக்கத்தான் மனம் வருகுது மாமி" என்றாள்.

"ஓம் பிள்ளை உந்தப் பாவத்தை எந்த கங்கையிலை கழுவினாலும் இவங்களாலை கழுவேலாது. படுபாவியள்" என தனது மனங் கொண்டவரையில் திட்டினாள் கனகம் மாமி.

"மாமி இனி எப்படி மாமி வீட்டை இதுகளை காவிக் கொண்டு போறது. இவங்களை நம்பி வந்து நடுத்தெருவிலை எல்லே நிக்கிறம். இனி எங்கை ஓட்டோ பிடிக்கிறது. சும்மாவே வரமாட்டார்கள். இரவு பத்து மணியாகுது. ஆர் வரப் போறாங்கள். இருட்டுக்கை நிக்கவும் பயமாக இருக்கு மாமி. ஓம் பிள்ளை இனி எப்படி வீட்டை போறது. இப்படி இவர்கள் தடுமாறிக் கொண்டிருக்கும் வேளை நிலாவெளி றோட்டாலை இரண்டு இளைஞர்கள் தனித்தனிச் சையிக் கிள்களில் வந்து கொண்டிருந்தனர். மனோகரிக்கு மனசுக்குள் ஒரு தெம்பு இளைஞர்களும் இவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மித்து வந்துவிட்டனர். மனோகரி துணிச்சலை வரவழைத்து அவர்கள் இருவரையும் நிறுத்தினாள். அவர்களை நிறுத்தியவள் அழாக்குறையாக தமது நிலைமையை அவர்களுக்கு எடுத்துக் கூறினாள்.

"அக்கா நீங்கள் யோசிக்க வேண்டாம் எங்கடை தாயைப் போல ஒரு மாமியும் எங்கடை சகோதரி போல உங்களையும் தவிக்க விட்டிட்டு நாங்கள் போக மாட்டோம். ஆனா எங்கடை சையிக்கிள்கிலை ஏறி வர உங்களுக்கு ஏலுமெண்டா பயப்பிடாமல் வாங்கோ உங்களையும் உங்கடை வெற்று சிலிண்டர் களையும் ஏத்திக் கொண்டுபோறது எங்கடை கடமை. நாட்டு நிலமை சனம் படுறபாட்டின் தாக்கங்களை நாங்கள் அறிவம் அக்கா. நாங்கள் ரண்டு பேரும் பட்டதாரி ஆசிரியர்கள். நிலா வெளியிலை மரக்கறித் தோட்டம் செய்யிறனாங்கள். அங்கை போட்டுத்தான் நாங்கள் வாறம். எங்கடை இடமும் அன்புவழிபுரந்தான். நீங்கள் எதுக்கும் யோசிக்காதேங்கோ" எனச் சொல்லிய இளைஞர்கள் அவர்களை தனித் தனியே பின் கரியரிலை ஏத்தி வெற்றுச்சிலிண்டர் களையும் சைக்கிள் பாறிலை வைச்சபடி தமது பயணத்தைத் தொடர்ந்தனர். கிட்டத்தட்ட ஒருமணி நேர சையிக்கிள் ஓட்டம். முன்னும் பின்னும் பாரம் என்பதால் இவ்வளவு தாமதம். கிட்டத்தட்ட மணி இரவு பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. இளைஞர்கள் மனோகரியையும், கனகம்மாமியையும் மிகவும் பக்குவமாக அவர்களது வீட்டுக்கு கொண்டுவந்து இறக்கினர்.

"தம்பியவை உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் பிள்ளையள். நீங்கள்வராட்டி நாங்கள்நடுத்தெருவிலை தான் நிண்டிருப்பம். அந்தப் பிள்ளை யாரப்பாதான் உங்களை அனுப்பி வைச்சவர்" என மாமி அந்த இளைஞர் களை கையெடுத்துக் கும்பிட்டாள். மனோகரிக்கு கண்கலங்கி கண்ணீர் கொட்டியது. "தம்பியவை உங்களைப் போலநல்ல மனசு உள்ள மனிசராலைதான் இன்னும் உலகம் வாழுது" என அவளும் அவர்களை கைகூப்பி வணங்கினாள்.

"ஐயையோ.... நாங்கள் பெருமைப் படுறம் அம்மா இப்படி அபலையான சனங்களுக்கு உதவி செய்யிறதிலை பெருமைப்படுறம். எங்களை நீங்கள் கும்பிட வேண்டாம். இது எங்கடை சமுதாயக்கடமை" என ஒரு இளைஞன் தனது படிப்பறிவையும் பண்பறிவையும் இணைத்துப் பேசிவிட்டு தனது நண்பனையும் அழைத்துக்கொண்டு தமது வீடு நோக்கி விரைந்தனர். மனோகரியும் கனகம்மாமியும் அழுவாரைப்போல தமது வெற்றுச் சிலிண்டர்களை தூக்க முடியாது தூக்கிச் சுமந்து தத்தமது வீட்டுக்குச் சென்றனர். அடுத்தநாள் தனது இரு பிள்ளைகளையும் பள்ளிக்கு விட்டுவிட்டு மாமியாருக்கும் சாப்பாடு கொடுத்துவிட்டு முதல் நாள் பட்ட அலுப்பைத் தாங்காதவளாய் மனோகரி மீண்டும் படுக்கையில் போய் விழுந்தாள். கைத்தொலைபேசி அலறியது. சினத்துடன் தொலைபேசியைக் கையிலெடுத்து யாரின் அழைப்பு எனப் பார்த்தாள். கனகம் மாமிதான் அழைப்பை எடுத்திருந்தாள். "ஹலோ மாமி.... சொல்லுங்கோ ஏன் இண்டைக்கும் எங்கை யெண்டாலும் காஸ் குடுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாங்களோ"

"போடி புள்ளை உனக்கு எப்பவும் பகிடிதான். அதில்லையடி புள்ளை நேற்றைக்கு இரவு நிக்கவேண்டாம் போங்கோ போங்கோ எண்டு அடிக்காது குறையா அறுவான்கள் துரத்தினவங்க ளெல்லே"

"ஓம் மாமி"

"அடி புள்ளைஅந்தத் துலை வான்கள் செய்த வேலை என்ன வெண்டு தெரியுமே. நிண்ட ஆக்களைத் துரத்திப் போட்டு எல்லோரும் போன பிறகு...."

"போனபிறகு..."

"இருநூற்றைம்பது சிலிண்டர்கள் குடுத்த வங்களாமடி. எங்கடை செல்லப்பற்றை மகள் சிவமணி சொன்னவளடி"

"அவளுக்கு எப்படி மாமி தெரியும்?"

"அதுவோ பிள்ளை... சிவமணியும் தன்ரை புருஷன்காரனோடை ஆயிரத்து எழுநூறாம் அவளின்ரை நம்பர். எல்லா ரும் போனாப் பிறகும் அவளும் புருஷ ன்காரனும் இவங்கடை ஜில்லுமாலு தெரிஞ்சு ஒழிச்சு நிண்டவங்களாம். அவங் கள் நினைச்சமாதிரி இரவு பத்தரை மணிக்குமேலை இருநூற்றைம்பது சிலிண்டர்கள் குடுத்தவங்களாமடி இந்த அறுவார்"

"அப்பிடியே மாமி... பாத்தியளே துலைவாங்கள் கால்கடுக்க வெய்யி லுக்கை மழைக்குள்ளை நிண்ட சனங் களை துரத்தியடிச்சுப்போட்டு கடை முதலாளிமாருக்கும், காசுக்காரர்,சொந்தக் காரருக்கும் குடுத்திருக்கிறாங்கள் போல"

"ஓமடி புள்ளை உதுதான்நடந்ததடி. கியூவிலை நிக்காமல் திடீரெண்டு அங்கை வாகனங்களிலை வந்து இறங்கினவங் களுக்கு ஆளுக்கு ஐஞ்சு ஆற சிலிண்டர் குடுத்தாங்களாமடி. சிவமணியும் புருஷ ன்காரனும் சண்டைபிடிச்சு தங்கடை ரோக்கின்நம்பரை காட்ட அவங்களுக்கும் மனமில்லாமல் ஒரு சிலிண்டர் குடுத்தாங் களாம். அந்த கொள்ளையில போவார்..."

ஆத்திரம் மேலிட பொரிஞ்சு தள்ளிய மாமியின் குரல் அதுக்கு மேல் ஒலிக்க மறுக்க மாமி தனது தொலைபேசி அழைப்பை துண்டித்துக் கொண்டாள்.

● ● ● ●

## ஆதங்கம்

பாரதி, பெரியார் போன்ற மேதைகளே பல சந்தர்ப்பங்களில் தமிழ்ச் சமூகத் தைப் பார்த்துத் திட்டியிருக்கிறார்கள். கவலைப்பட்டிருக்கிறார்கள். காரணம், தொன்மையான ஒரு இனம் எப்படித் தன்னை முன்கொண்டு செல்லமுடியாமல்தடுமாறிக்கொண் டிருக்கிறது என்ற ஆதங்கம் - கவலை தான். இது ஒரு எல்லைக்கு மேல் சகிக்க முடியாது என்ற நிலையில் கோபமாகிறது. மேதைகளையே பொறுமையின்றித் திட்ட வைத்தி ருக்கிறது. சாமானியர்களான நாம் எந்த மட்டில்? இதொன்றும் நியாயப்படுத்தல் அல்ல. உண்மையான நிலவரம்.

**கருணாகரன் சிவராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபிடி மண்

## சிறப்புச் சிறுகதை

ஜயாத்துரை சாந்தன் ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவர். மொழி பெயர்ப்பிலும் உலக எழுத்தாளர் களைத் தமிழில் அறிமுகம் செய்வதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறார். தமிழிலும் ஆங்கிலத்திலுமாக 27 நூல்களை எழுதியிருக்கிறார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவருமாவார். இவரது முதலாவது சிறுகதை 1966 ஆம் ஆண்டு புரட்டாதி கலைச்செல்வி இதழில் வெளியானது. மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது இவரது "பார்வைகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியானது. தமிழ்ச்சிறுகதை வளர்ச்சிக்குப் பங்களிக்கும் பல சிறுகதை களின் ஆசிரியர். சிறிய சிறு கதைகள், குறுங்கதைகள் என்ற வடிவங்களை வெற்றிகரமாக கையாண்டவர்.



**ஐ. சாந்தன்**

"போவமா..." காலணிகளை மாட்டிக் கொண்டே ராஜா கேட்டான்.

"ஓ..." என்றாள் கல்யாணி.

"பை?..." ஒரு முறுவலுடன், தன் கையிலிருந்த நைலான் கூடையைத் திறந்து அதனுள் ஒழுங்காக மடித்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பெரிய பாலித்தீன் பைகளை எடுத்து விரித்துக்காட்டினாள் கல்யாணி. அவள் வெளியே வந்ததும் கதவைப் பூட்டிக் கொண்டு ராஜா பின்னால் வந்தான்.

அவர்களுடைய அனெக்சுக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்கும் பொதுவான, ஒடுங்கிய பாதையில் நடந்து தெருவில் இறங்கினார்கள். மாலை நேரத்து நெரிசலில் தெருவில் நடப்பதே சிரமமாயிருந்தது. ராஜா முன்னாடியும் கல்யாணி பின்புறமுமாய் காலி வீதியை நோக்கி நடந்தார்கள்.

"போதுமான நேரமிருக்கும்..." அவன் திரும்பி மெல்லச் சொன்னான்.

"இருட்டவே இன்னும் ஒரு மணி நேரமாகும். அதுக்கு முன்ன அங்க போயி என்ன செய்யிறது ?"

"அப்படியே , மோகன் வீட்டுக்குப் போய்விட்டுப்போகச் சரியாயிருக்கும்..." என்ற கல்யாணி,

"கண்டு எப்ப கிடைக்கும்?" என்று கேட்டாள்.

"சாடி ஆயத்தமெண்டா, நாளைக்குக் கூட எடுக்கலாம்..." வழமையாக இந்த நேரத்தில் கொழும்பிலிருந்து இரத்மலானைக்கு பஸ்ஸில் போவதை நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால் இன்றைக்கு ஏதோ அதிசயம் போல, அவர்களுக்கு இருக்கையில் இரண்டு இடம் கிடைத்தது. நெரிபடாமல் போய் விடலாம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இப்போதைய அனெக்சுக்கு குடி வந்து மூன்று மாதமாகிறது. புதுக் குடித்தனத்திற்கேற்றதாய், அமைதியாய், தொல்லைகளில்லாத இடமாயிருந்தது அது. வாடகைகூட அதிகமென்று சொல்ல முடியாது.

புது இடத்துக்கு வந்ததும், எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கி அழகு படுத்தினாள், கல்யாணி. ஆனால், யாழ்ப்பாணத்தின் ஒரு கிராமத்தின் விட்டாத்தியான வாழ் விலிருந்து இந்த அனெக்ஸ் ஜீவியத்திற்குள் புகுந்திருந்தவளுக்கு, வீட்டில் எங்காவது ஒரு பசுமையைக் காண முடிந்தால் நன்றாயிருக்கும் என்று பட்டது. ஒரேயொரு பூச்சாடியாவது வைக்க முடிந்தால் அந்த இடம் முழுவதுமே தனிக்களை பெற்று விடும். வரவேற்பறை ஜன்னலருகில் காலை வேளைகளில் நல்ல வெயில் பிடிக்கிறது. ஜன்னல்கூட, ஒரு சிறிய பூச்சாடி வைக்கக் கூடிய அகலம். ராஜா ஒரு செடியைப்பற்றி சொன்னான். பூக்கிறதில்லை, அலங்காரச் செடிதான். நல்ல வடிவு. அவன் அலுவலகத்திற்கருகில் ஒரு பூஞ்செடி விற்பனை நிலையத்தில் கண்டிருக்கிறான். இலைகள் கரும் பச்சையில் வெல்வெட் மாதிரி. இடைக்கிடை வெள்ளைப் பொட்டுக்கள்... அவன் அதை விவரித்த விதத்தில் கல்யாணியின் ஆவல் பன்மடங்கா கிற்று.



"மோகன் வீட்டிலை கேட்டுப்பாத்தா என்ன?"

"எப்படிக் கேட்கிறது...? மோகனும் பிறகு தன்ர வீட்டுச் சொந்தக் காரரைத்தானே கேட்க வேணும்?"

மண்தான் பிரச்சினையாயிருந்தது. அது மட்டும் கிடைத்திருக்குமென்றால், இரண்டு கிழமைக்கு முந்தியே செடி வீட்டுக்கு வந்திருக்கும்.

இன்றைக்கு ராஜா அலுவலகத்திலிருந்து வந்தபோதே ஒரு திட்டத்துடன் தான் வந்திருந்தான்.... மோகனுக்கும் அவன் மனைவி பிள்ளைகளுக்கும் இவர்களைக் கண்டது சந்தோஷமாயிருந்தது. இரவு சாப்பிட்டுவிட்டுப் போகலாமென்று வற்புறுத்தினார்கள்.

"இன்னொரு நாள் வாறம். கடைகள் பூட்டுவதற்கு முன் கொஞ்சம் ஷாப்பிங் செய்ய வேண்டியுமிருக்கு..."

சொல்லிக் கொண்டு புறப்பட்ட போது இருட்டத் தொடங்கியிருந்தது. மெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தார்கள். தார் போடாத மண் ஒழுங்கை. வழமைபோல, ஆளரவமின்றி அமைதியாய்க் கிடந்தது.

"அந்தத் தூண்டியிலைதான்..." ராஜா காட்டினான்:

"நல்ல மண்.... விளக்குந் தள்ளியிருக்கு" – நெருங்கினார்கள்.

"பின்னுக்கு ஆரும் வருகினமா பாரும்... முன்னாலை ஒருத்தருமில்லை..."

"பின்னாலுமில்லை..." பார்த்துவிட்டு, கூடைக்குள்ளிருந்த பாலித்தீன் பைக ளையும் ஒரு பழைய பேணியையும் எடுத்தாள் கல்யாணி. பேணியைக் கண வனிடம் கொடுத்தாள்.

"ஷ்ஷ்.... ஒரு சைக்கிள்..."

விளக்கில்லாத ஒரு சைக்கிள் அவர்களை நெருங்கி வந்தது. ராஜா குனிந்து, காலணி களைச் சரிப்படுத்துகிற பாவனை காட்டி னான். சைக்கிள் தாண்டியது.

"சரி..." அவன் சொன்னபோது, கல்யா ணிக்கு இதயம் படபத்தது.

ராஜா, குனிந்த குனியிலேயே மண்ணை விறுவிறென்று வறுகத் தொடங்கினான். கல்யாணி பை ஒன்றை விரித்துத் தயாராய் அருகில் பிடித்துக் கொண்டாள்.

ஒன்று... இரண்டு... மூன்று... நாலு...

"இன்னுமொன்று" என்றான் ராஜா.

"இன்னொரு சைக்கிள் பின்னாலை." பரபரத்துக் கல்யாணி எச்சரித்தாள்.

ராஜா சட்டென்று எழும்பித் திரும்பிப் பார்த்தான்.

"அது தூர வருகுது" மீண்டும் குனிந்து, குவிந்திருந்ததை அள்ளிப் பையில் போட் டான்.

"போதும், வாங்கோ..." கல்யாணி அந்தரப்பட்டாள்.

ராஜா நிமிர்ந்து காலால் நிலத்தை மட்டம் பண்ணினான்.

"போவம்..." என்றான்.

"...அவசரப்படாம ஆறதலா நடவும்." பின்னால் வந்த சைக்கிள் அவர்களை நெருங்கித் தாண்டிப் போனது. கல்யாணி பெருமூச்சு விட்டாள். ராஜா, அவளிடம் இருந்த பைகளை வாங்கி ஒழுங்காக மடித்துத் துடைத்து கூடைக்குள் வைத் தான்.

"வைச்சிரும்..." கூடையைக் கொடுத்து விட்டுக் கைகளைத் துடைத்தான்.

"பூச்சாடிக் கடை பூட்ட முதல் போய்ச் சேர வேணும்..."

"ஓமோம்...." என்றாள் கல்யாணி.

● ● ● ●

## பகவத்கீதை

பகவதி கீதை என்பது ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய நிகழ்கால வாழ்க்கையிலுள்ள சிக்கலான பிரச்சினையைத் தீர்த்துக்கொண்டு ஒளிமயமான எதிர்காலத்தை நொக்கி முன்னேறுவதற்காக உதவும் ஒரு அறிவுரையாகும். அதை ஒரு புராதனமான சாஸ்திரம் என்றோ சமய சம்பந்தமான அறிவுரைகள் அடங்கிய நூல் என்றோ இந்து மதத்தின் புனித நூல் என்றோ கருதக்கூடாது. அது ஒரு குறிப்பிட்ட மதம் அல்லது இனத்தின்கொள்கையின் எல்லைக்கு அப்பாற்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறிக் கிடங்கு

இவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். சிறுகதை, கவிதை போன்றவை எழுதுவதில் மிகுந்த நாட்டமுள்ளவர். ஆரம்பத்தில் கிறிஸ்தவ சஞ்சிகையான சத்திய வசனத்தில் சிறுகதைகளை எழுதி வந்த இவர் ஆர்வமேலீட்டால் தொடர்ந்து தேசியப் பத்திரிகைகளான தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகியவற்றிலும் எழுத ஆரம்பித்தார். இவற்றுடன் அறிவிப்புத் துறையிலும் பட்டிமன்றங்களிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர். இவர் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு மிக விரைவில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.



**தாமரைக்கேணி கு.குணறுபேஸ்.**

என் இளமைக் காலத்து இனிய நினைவுகளை மீட்டிப் பார்த்தால் அது எப்போதும் இன்பமய மானதாகவே இருக்கிறது. நான் என்னுடைய சிறு வயதில் காலையில் எழுந்து சோம்பேறி முறிப்பதுவும், அப்போது என் அம்மா கொண்டு வந்து தருகின்ற பசும் பால் தேனீரும், இப்படியாக அன்றைய ஒவ்வொரு நாட்களும் ஆரம்பிக்கும். பூரணம் அக்காதான் எங்களுக்கு பசும்பால் கொண்டு வந்து தருவார். அந்தப் பசும்பால் தேனீரைக் குடித்துவிட்டு என்னை அம்மா குளிப்பாட்டி எனக்கு தோய்த்து உலர்ந்த ஆடை அணிவித்து விட்டபின் காலை ஆகாரம் ஊட்டி விடுவதை நினைத்துப் பார்த்தால் உள்ளம் மகிழ்ச்சியின் மிகுதியால் பொங்குவதை நான் உணர்கின்றேன்.

காலை ஆகாரம் உண்டு விட்டால் என் அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்து விடும் என்பது என் அம்மாவுக்கு நன்றாகவே தெரியும். பக்கத்து வீட்டு மாமியின் பிள்ளைகளோடு விளையாடுவதுதான் எனது அடுத்த கட்ட நடவடிக்கைகள். அம்மாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு நான் விளையாடத் தயாராகும்போது என் மாமியின் பிள்ளைகளும் காலையில் எழுந்து காரியங்களை முடித்துக் கொண்டு விளையாட்டுக்கு ஆயத்தமாகிவிடுவர். நாங்களெல்லாரும் மாமியின் பெரிய வளவில் ஒரு மூலையில் இருக்கின்ற ஒரு வேப்பை மரத்தடியில் ஒன்று கூடி விடுவோம். வேப்பை மரத்தடியில் குவிந்து கிடக்கின்ற காய்ந்த சருகுகளை சிறிய விளக்குமார் கொண்டு கூட்டித் துப்புரவு செய்து விட்டு விளையாட்டிற்கு ஆயத்தமாகி விடுவோம். சுற்றுப் புறத்திலுள்ள பக்கத்து வீட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் எங்கள் ஆயத்த நடவடிக்கைகளின் போது வந்து சேர்ந்து விடுவர்.

நாங்கள் ஆண்களெல்லாம் கடை விரிக்க பெண்களெல்லாம் வந்து எங்கள் கடைகளில் பொருட்களை வாங்குவார்கள். உள்ள இலை குழைகளையெல்லாம் பறித்து நாங்கள் விற்பனைக்காக வைத்திருப்போம். உடைந்த கலவான்கட்டி ஓடுகள்தான் எங்கள் விற்பனைக்கான பரிமாற்றுப் பணம். பெரிய கட்டிகளாயிருந்தால் அதன் பெறுமதி அதிகம். சிறிய கட்டிகளாயிருந்தால் அதற்கேற்றபடி அதன் பெறுமதியும் எங்களால் தீர்மானிக்கப்படும். சிறுவர்களாகிய எங்களுக்கு எப்படித்தான் இந்தப் பணப்பெறுமதியை கலவான்கட்டிகளில் தீர்மானிக்கும் ஞானம் வந்ததென்று இப்போது நினைத்துப் பார்த்தால் அது ஆச்சரியமாய் இருக்கிறது.

வேப்பை மரத்தடியில் எங்கள் விளையாட்டுக்களை ஆரம்பிப்பதற்காக வீட்டிலிருந்து அம்மாவிடம் விடை பெறும் போது ஒரு பாடலை நான் பாடுவது வழமை. இப்போது அந்தப் பாடல் ஞாபகத்திற்கு வருகிறது.

**அம்மா நான் விளையாடப் போறேன்**

**கையில் அன்புடன் பட்சணம்**
**தந்தனுப் பென்னை**

**சும்மா நான் உட்கார மாட்டேன்**

**அன்புத் தோழர் அழைக்கிறார் நாளிகை ஆச்சு**

**வேப்பை மரத்தடி நிழலில்**

**மணல் வீடொன்று கட்டி**

**விருந்துகள் செய்வோம்**

**பாட்டுக் கச்சேரிகள் செய்வோம் - நாம்**

**பாடுவோம் மத்தளம் போடுவான் கிட்டு**

**கேட்டுச் சபாஷ் எனச் சொல்வார் - பின்பு**

**கிங்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்**

எனும் பாடல்தான் அது. அது எங்கள் பாடசாலை தமிழ்ப் புத்தகத்தில் இடம் பிடித்த ஒரு அற்புதமான பாடல் தான் அது.

அப்படியாக நாங்கள் மணல் வீடு கட்டி கடை வைத்து விளையாடிய



பின்பு பெண்கள் மண் சோறு கறி சமைத்து எங்களுக்கு தருவதும் அதனை நாங்கள் சாப்பிடுவது போன்று பாவனை செய்வதும் நடக்கும். அதன் பின்பு எங்கள் கள்ளன் பொலிஸ் விளையாட்டுக்களும், ஒளித்துப் பிடிக்கும் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டுக்களும் என ஒவ்வொன்றாய் மாறி மாறி விளையாடிக் கொண்டிருப்போம். அவ்வாறு விளையாடும் விளை யாட்டுக்களில் ஒன்றுதான் இந்தப் பொறிக் கிடங்கு விளையாட்டு. பொறிக் கிடங்கு விளையாடி சில வேளைகளில் எங்கள் தாய் தந்தையரிடம் நல்ல அடியும் வாங்கியிருக்கின்றோம். பொறிக்கிடங்கு செய்வதில் நானும் எனது நண்பன் சுதாவும்தான் தீவிர ஈடுபாடு காட்டுவோம். அப்படித்தான் ஒரு நாள் நாங்கள் பொறிக் கிடங்கு தயார் செய்து விட்டு அதில் விழும் ஒருவரின் விழுகைக் காய் காத்திருந்த போது முத்தையாக் கிளாக்கர் விழுந்தெழும்பினார். அன்றிலிருந்து அவர் இறக்கும்வரை கால் உடைந்தவராக நொண்டி நொண்டி நடந்ததை நாங்கள் கண்டு பிற்பட்ட நாட்களில் மனம் வருந்தியதுமுண்டு. இத்தனைக்கும் முத்தையாக் கிளாக்கர் ஒன்றும் கால் ஊனமுற்றவரும் அல்லர். அவர் நல்ல நிலையில்தான் இருந்தார். சிறுவர்கள் நாங்கள் செய்த பொறிக் கிடங்குதான் அவரைக் கால் ஊனமுற்றவர் ஆக்கியது.

பொறிக்கிடங்கு தயார் செய்யும் முறை இதுதான். ஆட்கள் நடந்து செல்கின்ற நடைபாதை இடமாக ஓர் இடத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஆட்கள் நடந்து செல்கின்ற இடத்தை அவதானித்த பின்னர் அவர்களின் நடமாட்டம் இல்லாத ஒரு வேளையைப் பார்த்து அவ்விடத்தில் ஒரு பாதம் உட்செல்லும் அளவு விட்டத்திற்கு ஒரு அடி ஆளத்திற்கு குழியைக் கிண்ட வேண்டும். அதனை நாங்கள் சிரட்டையினால்தான் கிண்டி மண்ணை வெளியே எடுப்போம். இப்போது ஒரு அடி ஆழமானதும், ஒருவருடைய பாதம் உட்செல்லும் அளவு விட்டமுடையது மான குழி தயாரான பின்னர் அக்குழியின் மேற்பரப்பில் ஈர்க்கு போன்ற மெல்லிய குச்சிகளை அல்லது ஈர்க்குகளை குறுக்கும் நெடுக்குமாக மாறி மாறி வைத்து அதன் மேல் ஒரு பெரிய பத்திரிகையை வைத்து அந்தப் பத்திரிகையின்மேல் உலர்ந்த மண்ணைப் பரவி வித்தியாசம் ஏதும் அந்த இடத்தில் தெரியாதபடி அந்த இடத்தை சீர் செய்து விடவேண்டும்.

இப்போது அந்த நடைபாதைப் பகுதியில் வித்தியாசம் ஏதும் தென்படாது. அப்பகுதியில் நடந்து செல்பவர்கள் அலாதியாக நடந்து செல்லும் பொழுது அவர்களின் ஏதோ ஒரு பாதம் எப்படியோ அந்தப் பொறிக் கிடங்கில் சரியாகச் சந்தித்து கால் வைக்கும்போது அவர்களின் உடற்பாரத்தின் மிகுதியினால் பாதம் நேரடியாக கிடங்கினுள் சென்று விடும். அவர்கள் அப்படி விழுந்தெழும்பிச் செல்வதை நாங்கள் தூரத்தில் இருந்து பார்த்து கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்திருக் கிறோம்.

அப்படி ஒருநாள் நாங்கள் வைத்த பொறிக்கிடங்கில் விழுந்தவர்தான் முத்தையாக் கிளாக்கர். காலை எழுந்து கடைத் தெருவுக்குச் சென்ற முத்தையாக் கிளாக்கரை இலக்கு வைத்து சிறுவர்கள் நாங்கள் பொறிக்கிடங்கு தயார் செய்து வைத்திருந்தோம். அலுவல்களை முடித்துக் கொண்டு வந்தவர் எங்கள் பொறிக்கிடங்கில் விழுந்தபோதுதான் அவரின் கால் உடைந்தது. அன்று அவர் தாராளமாகவே விழுந்ததனால் அவருடைய வேஸ்டி கிழிந்து போனதும் எங்களுக்கு நன்றாகவே தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் இந்தப் பொறிக் கிடங்கிற்குள் போகன்விலா போன்ற முட்களையும், சாணத்தையும் எடுத்து வந்து வைத்து விடுவோம். விழுபவர்களின் பாதத்தில் முட்கள் குத்துவதுடன் சாணத்தையும் மிதித்துக் கொண்டு விழுந்து கிடந்திருக்கிறார்கள்.

அப்படி ஒரு நாள் நாங்கள் வைத்த பொறிக் கிடங்கிற்குள் சாணத்தை மாத்திரம் இட்டு வைத்தபோது அதில் விழுந்த முதியவர் தங்கராசா விழுந்து கிடந்தபடியே "போற வாற வழியில இவனுகள் செய்து வைத்திருக்கிற வேலையைப் பார்த்தாயா? யார் இந்த வேலையை செய்ததெண்டு கண்டு பிடிச்சனெண்டா பொலீஸ்லதான் பிடிச்சுக் குடுப்பன்" என்று சத்தம் போட்டுப் பேசியதைக் கேட்டு நாங்கள் ஒவ்வொருத்தராய் ஓடி ஒழிந்ததும் அவர் எங்கள் வீடுகளுக்கு வந்து எங்கள் அம்மா அப்பாவிடம் முறையிட்டபோது நாங்கள் அதைச் செய்யவில்லை என்று மறுப்புச் சொல்லி ஒருவாறாகத் தப்பித்துக் கொண்டதையும் நினைத்துப் பார்த்தால் எவ்வளவு கூடாத காரியங்களை பயமறியாத சிறு வயதிலே செய்திருக்கிறோம் என்று இப்போது சிந்திக்கவும் உணரவும் முடி கின்றது.

நாங்களெல்லாரும் அன்றொருநாள் அப்படியாய் விளையாடிக் கொண்டிருந்த போது அந்த வழியாக நன்றாகப் பருத்த உடம்புடைய ஒரு தாய் தனது இளம் பிள்ளையோடு வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அயலூரிலிருந்து ஏதோ ஒரு தேவைக்காக எங்கள் ஊரின் கிராமப் புறமாக வந்திருக்க வேண்டும். அவர்கள் நடந்து செல்வதைக் கண்ட நான் பெரிய சத்தமாக "அலியா... அலியா..." என சிங்களப் பொருள்பட கத்தினேன். நான் போட்ட சத்தம் என் அம்மாவிற்கு கேட்டு விட்டது. வீட்டிலிருந்து அம்மா வெளியே வந்து பார்த்த போது அவ்வழியாக பருத்த தோற்றமுடைய ஒரு தாயார் தனது பிள்ளையோடு சென்று கொண்டிருந்தார். அவர்களைக் கேலி செய்வதற்குத்தான் நான் அப்படி அலியா... அலியா... என்று பெரும் சத்தமாகக் கத்தினேன் என்பதை மட்டுக் கட்டிக் கொள்ள அம்மாவிற்கு அதிக நேரமெடுக்கவில்லை.

விளையாடிக் கொண்டிருந்த என்னைக்கூப்பிட்டு பிரம்பினால்தாராளமாக அம்மா அடிபோட்டுத் தண்டித்தார். அன்றிலிருந்து நான் வயதிற்கு மூத்தவர்கள் யாரையும் கேலி செய்யும் பழக்கத்தை விட்டு விட்டேன் என்று தான் சொல்ல வேண்டும்.

அன்று பொறிக் கிடங்கு செய்து மற்றவர்களின் கால் உடைவுக்கும் விழுந்தெழுதலுக்கும் காரணமாயிருந்து அவர்களின் துன்பத்தில் நாங்கள் இன்பம் கண்டதுண்டு.

அன்று நாங்கள் சாதுரியமாய் தயார் செய்து விளையாடிய எங்கள் பொறிக் கிடங்கில் பாதசாரிகள் விழுந்து எழுவதும் காலுடைவதும் நிகழ்கின்றபோது எங்களின் தொழில்நுட்பம் நிறைந்த செயற்பாடு வெற்றியளித்த மகிழ்ச்சியிலே நாங்கள் துள்ளிக் குதித்து மகிழ்வடைவது இப்போதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

இன்று நாங்கள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்று சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களாக, அரச அரசசார்பற்ற நிறுவனங்களில் உயர் பதவி வகிக்கும் அதிகாரிகளாக இருக்கிறோம்.

ஆனால் இன்றைய சிறுவர்களுக் கெல்லாம் வேப்பை மரத்தடியில் மணல் வீடு செய்து கூடிக்குலவி விளையாடும் அனுபவங்கள் இல்லை. செல்போன் விளையாட்டுக்கள் என்றும், கணிணி விளையாட்டுக்கள் என்றும் நான்கு சுவர்களுக்குள் இருந்து தனிமையாய் விளையாடும் விளையாட்டுக்கள்தான் இன்றைய சிறுவர்களின் உலகம்.

அதில் ஒன்றுதான் நீலத் திமிங்கலம் விளையாட்டு. இந்த விளையாட்டினால் எத்தனை சிறார்கள் தங்கள் உயிர்களை மாய்த்திருக்கிறார்கள். நவீன விளையாட்டுக்களும், நவீன கருவிகளும் சாதனங்களும் சிறுவர்களை அழிவின்பால் நடாத்திச் செல்கின்றது. ஆனால் எங்கள் பாரம்பரிய விளையாட்டுக்கள் மனதிற்கு இதம் தருவதுடன் உடலுக்கும் உற்சாகத்தைத் தருகின்றது.

வாருங்கள் நாம் அனைவரும் மீண்டும் ஒன்று சேர்ந்து பொறிக்கிடங்கு செய்து விளையாடுவோம்.

● ● ● ●

சிறுகதை மஞ்சரியின் வடிவ
மாற்றம்பற்றி உங்கள்
அபிப்பிராயங்களை
எழுதுங்கள். ஒவ்வொரு
மஞ்சரியும் ஒரு சிறுகதைத்
தொகுப்பாகவே வெளிவரும்

# யாழ்ப்பாணக் குடியேற்றம்

போர்த்துக்கேயர் சாதிக்கட்டுப்பாட்டை தளர்த்தினதின் விளைவாகச் சாதிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. காணிகளைப்பற்றிய விபரங்கள் அடங்கிய ஏடுகள் (தோம்புகள்) முதல்முதல் கி. பழ. 1623 இல் எழுதப்பட்டபோது உயர்ந்த உத்தியோகங்களிலிருந்த பாணர், மழவர் முதலியோர் அவற்றில் தங்களை வேளாளர் என்று பதிந்து கொண்டனர். அரசாங்க ஏடுகளில் வேளாளர் என பதியப்பட்டது இதுவே முதன் முறையாகும். பெருந்தொகையான மக்கள் தங்களை வேளாளர் என்று பதிய முன்வருவதை உத்தேசித்து அரசினர் வேளாளர் சாதிப்பட்டப் பெயராகிய முதலிப் பட்டத்தை 18 இறை சாலுக்கு விற்கத் தொடங்கினர். பெருந்தொகையான மக்கள் அப்பட்டத்தை விலைக்கு வாங்கி தம்மை வேளாளராக்கிக் கொண்டனர்

**கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பலகை




## அத்தியாயம் 14

அதிபர் அப்படிக் கூறியதும். சிறிது நேரம் யாரும் எதுவும் கதைக்க வில்லை. ஒரே அமைதியாக இருந்தது. அப்போது வசந்தி எழும்பி அந்த ஆலோசனைகளின் நன்மை களைக் கூறி அதிலே குறிப்பிட்ட பதவியை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி அமர்ந்தாள். ஒரு ஆசி ரியை எழும்பி இது குறிப்பிட்ட ஆசிரியைக் கான மேலதிக வேலை யாதலால் அவர்களின் சம்பளத்தில் ஏதும் மாற்றம் ஏற்படுமா என்று கேட்க அதிபர்.

" நல்ல கேள்வி. இப்பொழுது என் னால் எதுவும் கூறமுடியாது. உங்க ளுடைய ஆதங்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் கேட்பது நியாயமே. நான் இது சம்பந்தமாக நிர்வாகத்துடன் கதைக்கவுள்ளேன். அவர்களோடு நான் உங்களுக்காகக் கதைப்பேன்." என்று உறுதி மொழி வழங்கினார். அதே ஆசிரியை திரும் பவும் எழும்பி அப்படியானால் இதனை நான் மனமகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன். இப்படிச் சொன்ன ஆசிரியை சந்திராவின் சொற்கேட்டு நடக்கும் ஆசிரியை. ஏனைய ஆசி ரியைகளும் தங்களது சம்மதத்தை மகிழ்வோடு தெரிவிக்க,

நிலைமை கட்டில்லாமல் போவதை அவதானித்த சந்திரா எழும்பி

"அதிபர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இந்த முறைமை ஒரு பாடசாலையிலும் இல்லை. இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற வேலைகளோடு எதற்காக இந்த ஆலோசனை என்று எனக்குப் புரிய வில்லை. அத்தோடு இந்த கடிதம் வந் ததும் நிர்வாகத்தாரோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டேன். அத் தோடு இப்படிப் புதிய விடயங்கள் ஆரம்பிக் கும்போது கல்வி அமைச்சோடு கதைத்து அனுமதி பெறவேண்டும். எந்த விதமான அனுபவங்களும் இல்லாத இவர் கூறியவைகளைக் கருத்தில் கொண்டு எங்களைக் குழப்புவது சரி யில்லை. நிர்வாகத்தினர் இதனை ஏற்றுக் கொள் ளப்போவதில்லை. சம்பள உயர்வு கிடைக்கப் போவது மில்லை. அத்தோடு சம்பளமில்லாத இந்த வேலையை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்" என்று கூறி அமர, அதிபர் "சந்திரா நீங்கள் நிர்வா கத்தோடு கதைத் தமை எனக்குத் தெரியும். அவர்கள் என்னோடு கதைத்துவிட்டார் கள். சம்மதித் தும் விட்டார்கள். சம்பள விடயமாக அவர்களின் அடுத்த கூட்டத் தில் தீர்மா னிப்பதாகவும் கூறியுள்ளார்கள். நீங்கள் இதற்கு சம்மதிக்கவில்லையானால் உங் கள் இடத்திற்கு நாங்கள் வேறு ஆசிரி யையைப் போடலாம். கல்வி அமைச் சோடு நாளை கதைக்கவுள்ளேன். பிள்ளை களின் நன்மைக்காக அவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். நீங் கள் இங்கே சாதாரண ஆசிரியை. நான் சொல்வதைக் கேட்பதுதான் உங்கள் கடமை. ஆனால் நான் அப்படி நடக்க விரும்பவில்லை. வேறு யாராவது சந்திரா ரீச்சரின் பத வியை ஏற்றுக் கொள்கி றீர்களா?" என்று கேட்டார். உடனே ஒரு ஆசிரியை எழுந்து நின்று தான் எடுத்துக் கொள்வ தாகக் கூற திரும்பிய சந்திரா ஏற்றுக் கொண்ட ஆசிரியைப் பார்த்து ஏங்கிப் போனாள். அந்த ஆசிரியை சந்திரா வின் நெருங்கிய நண்பி. சந்திராவின் கூட் டத்தைச் சேர்ந்த மற்ற ஆசிரியைகளும் எதுவும் கூறாமல் பதவியை ஏற்றுக் கொண்டார்கள். சந்திராவால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர்களை முழுசிப் பார்த்தாள். எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த கபிலன் சந்திரா ரீச்சரைப் பார்த்து "மாணவர்களுக்கு நல்ல விடயங்களைச் செய்ய அனுபவம் தேவை என்றில்லை. திறமையும் உலகை நோக்கும் ஆய்வு மனப்பான்மையும் இருந்தால் போதும். இன்று உலக நாடுகளோடு ஒப்பிடும் போது நமது நாடு கல்வியில் பின்தங்கி இருந்த லுக்கான காரணமும் இதுதான். நாங்கள் புதிய அணுகு முறைகளை ஏற்றுக் கொள்ளாமல் பழைய முறைகளோடு ஸ்தம்பித்து நிற்பதுதான். முயற்சித்துப் பார்ப்போம். நமது பிள்ளைகளுக்குச் சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்வோம் அல்லது நிராகரிப்போம். இங்கு நான் சொல்வதோ அல்லது நீங்களோ அதி பரோ சொல்வது முக்கியமல்ல. பதிலாக மாணவர்களின் நலன்தான் முக்கியம்." என்று கூறி முடித்துக் கொண்டான்.

அத்தோடு கூட்டமும் கலைந்தது.

சந்திராவுக்கு தான் எல்லா ஆசிரியர் முன்பும் தோற்றுவிட்டதாகக் கவலை. விறுக்கென்று யாரிடமும் சொல்லாமல் போய்விட்டாள்.

அப்போது சந்திரா என்று அவளது நண்பி கூப்பிட்டுக் கொண்டுவர,

" இப்ப ஏன் என்னட்டை வாறியள். கூட்டத்திலை வைச்சு முதுகிலை குத்திப் போட்டு. நாடகம் ஆடிறியள்" சந்திரா பொரிந்து தள்ளினாள்.

" இஞ்சரும் சந்திரா, நாங்கள் உம்மடை நண்பி எண்டதிற்காக வருகின்ற நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தை எப்பிடிக் கைவிடேலும்."
என்றாள் அந்தச் சரித்திர ஆசிரியை.
அவர்களுக்குப் பக்கத்திலை வந்த பூமி சாஸ்திர ஆசிரியை " சந்திரா நீர் ஏன் இதை எதிர்க்கிறீர்? பிள்ளைகளுக்கு இது நல்லதுதானே?" என்றாள்.
" எனக்கு அந்தப் பொடியனைப் பிடிக்கேல்லை. இவ்வளவுநாளும் இருந்த எங்களுக்கு அவர் என்ன வழி சொல்லிறது. அதுக்கு அந்தப் பிறின்சிப்பல் மனிசியும் ஓணான் மாதிரித் தலையாட்டுது." என்றாள் சந்திரா வெடுக்கென்று.
"இது உம்மடை தனிப்பட்ட பிரச்சினை. அதுக்காக நாங்கள் ஏன் வாற சந்தர்ப்பத்தைவிட வேணும்" என்றாள் சரித்திர ஆசிரியை.
" எனக்காக நீங்கள் ஒண்டும் செய்ய வேண்டாம். உங்கடை வழியை நீங்கள் பாருங்கோ. என்னை விட்டிடுங்கோ. இனி ஏதும் பிரச்சினை வந்தால் என்னட்டை வராதையுங்கோ. சொல்லிப் போட்டன்." என்று கூறியவாறு சந்திரா தன் வழியில் போய்விட்டாள்.
கபிலன் அதிபரிடம் கூறிவிட்டுப் புறப்பட்டான்.
கபிலன் புறப்பட்டபோது வசந்தி தானும் வருவதாகக் கூறிப் புறப்பட்டாள். போகும் வழியில்
" சந்திரா ரீச்சருக்குச் சரியான அடி" என்றாள் வசந்தி.
"வசந்தி உப்பிடி நாங்களும் கதைத்தால் அவவுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம். இனி உப்பிடிக் கதையாதையும். எங்களால் முடிஞ்சதைச் செய்வம்."
அதற்குப் பிறகு வசந்தி எதையும் கதைக்கவில்லை.
வசந்தி தன்வழியே தனது வீட்டிற்கும் கபிலன் தன் வீட்டிற்கும் சென்றார்கள்.
கபிலன் அறைக்கு வந்தபோது அறைக்குள் நண்பன் இருந்தான் ஆனால் லைற் போடாமல் இருட்டுக்குள் இருந்தான். கபிலனுக்கு அதிசயமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.
"என்ன மச்சான் லைற்போடாமல் இருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டு லைற்றைப் போட்டுவிட்டு அவனைப் பார்த்த கபிலன் திடுக்கிட்டுவிட்டான். அவனது முகம் அழுது வீங்கியிருந்தது.


● ● ● ●

## கீதையின் தரிசனம்

ஒரு அத்தியாயத்துக்கும் மற்றொரு அத்தியாயத்துக்கு மிடையே இன்றியமையாத நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அர்ச்சுனன் மிகவும் மனத்தளர்ச்சியும் சோர்வும் அடைந்திருந்தபோது, ஆன்மாவின் அழிவற்ற தன்மையைப் பற்றி இரண்டாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள போதனைகள் அவன் கண்களைத் திறந்தன. அவை அவனுக்கு வலிமையையும் மனவுறுதியையும் அளித்தன.
அப்பொழுது அர்ச்சுனன் கர்மயோகத்தின் இயல்பைப் பற்றியும், கர்மபலத் தியாகத்தைப்பற்றியும் அறிந்து கொண்டான். அதன்பிறகு புலன்களையும் மனதையும் அடக்கும் வழிகளையும், மனதை ஒரு முகப்படுத் தவும், தியானம் செய்வதற்குமான பயிற்சிகளை மேற்கொள்ளும் வழிகளையும் தெரிந்து கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாவும் கற்பனையல்ல'






**செங்கதிரோன்**

முதல் நாளிரவு எனக்கு நேர்ந்த அனுபவத்தை அடுத்த நாள் எனது அலுவலக நண்பர் கால்டீனுக்குக் கூறியபோது , நான் கூறிய விடயத்தை நன்கு செவிமடுத்த அவர் இறுதியில் "கோபால்! நீங்கள் ஒரு எழுத்தாளர் தானே உங்கள் நேற்றைய இரவு அனுபவத்தை ஒரு சிறுகதையாக எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பிவையுங்கள். இந்த அனுபவத்தைப் பலருடன் பகிர்ந்து கொண்டதாயிருக்கும்" என்றார். நானும் நண்பர் கால்டீனும் இலங்கை ஆள்புலசிவில் பொறியியல் அமைப்பின்கீழ் கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவில் தொழில்நுட்ப அலுவலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். நண்பர் கால்டீன் தந்த 'ஐடியா' மண்டைக்குள்ளே புகுந்து வண்டாகக் குடைந்து கொண்டேயிருந்தது. முதல் நாளிரவு எனக்கு நேர்ந்த அந்த அனுபவத்தைச் சிறுகதையாக்கும் முயற்சி மறு நாளிரவு எனக்குச் சித்தித்தது.

சிறுகதையை இப்படித்தான் ஆரம்பித்தேன். கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நான் கோமாரிப் பிரிவுக்குப் பொறுப்பாயிருந்தேன். கல்முனைக்குத் தெற்கே கோமாரிக்கும் பொத்துவிலுக்குமிடையில் கொழும்பு - இரட்மலான-வெல்லவாய-மட்டக்களப்பு வீதியின் 330ஆவது மற்றும் 331ஆவது கிலோ மீற்றர்களுக்கு இடையில் முருங்கந்தனை என்ற இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பாலமொன்றின் நிர்மாண வேலை எனது பொறுப்பிலேயே இருந்தது. கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பால நிர்மாண வேலைகளுக்குத் தேவையான இரும்புக் கம்பிகளை 'டாட்டா' ரக மஞ்சள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற 'லொறி'யில் ஏற்றிக்கொண்டு முருகந்தனைப் பால வேலைத்தலத்தை அடைய இரவு எட்டு மணியாகிவிட்டது.



நானும் சாரதி கதிர்காமத்தம்பி மட்டுமே 'லொறி'யில் பயணம் செய்திருந்தோம்.

முருங்கந்தனைப் பால வேலைத் தலத்தில் கொண்டு வந்த இரும்புக் கம்பிகளையெல்லாம் இறக்கி வேலைகள் மேற் பார்வையாளர் சதாசிவத்திடம் பாரம் கொடுத்த பின்னர் பால நிர்மாண வேலைகளுக்கெனக் கட்டப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டகைக்குள் வைத்து, 'கொங்கிரீட்டினுள்ளே உள்ளீடாக வைக் கப்படும் இரும்புக்கம்பிகளை எப்படி வைப்பதென்று, நீளப் பாட்டில் என்ன அளவுக் கம்பிகள் - அகலப்பாட்டில் என்ன அளவுக் கம்பிகள் - என்ன இடை வெளியில் வைக்கவேண்டும் - எந்த இடத்தில் எப்படி வளைந்திருக்க வேண்டும் - கம்பிகளை ஒன்றோடொன்று இணைக்கும் போது எப்படி இணைக்க வேண்டும் என்றெல்லாம் தொழிநுட்ப ஆலோசனைகளை மேற்பார்வையாளர் சதாசிவத்திற்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி முடிந்தபின் முருங்கந்தனையில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்பட இரவு பதினொன்றரை மணிக்கு மேலாகி விட்டது.

முருங்கந்தனையில் இருந்து கல்முனை நோக்கிய எமது பயணத்தில் சங்கமன் கண்டிக் கோவில் கழிந்து இடதுபக்கத்திலுள்ள தாண்டியடிக் குளத்தின் முன்னேயுள்ள பிரதான வீதியின் இறக்கத்தில், ஏனோ தெரியவில்லை? ஓடி வந்து கொண்டிருந்த 'லொறி' திடீரென்று "சர்! புர்!" என்ற சத்தத்துடன் நின்றுவிட்டது. 'எஞ்சின்' இயங்கவில்லை.

இடமோ வெட்ட வெளித் துண்டு. இருபக்கமும் வயல்பூமி. மனித குடியாட்டங்கள் எதுவும் பிரதான வீதியையொட்டி யதாக அருகில் இல்லை. இன்னுமொரு அரை கிலோமீற்றர் தூரம் முன்னே போனால் ஒரு கடையும் அதைச்சுற்றி ஓரிரு குடியாட்டங்களும் உண்டு. என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரம் நள்ளிரவு பன்னிரெண்டு மணி. கும்மிருட்டு. வானத்திலும் நட்சத்திரங்கள் மின்னவில்லை. 'தார்' வீதியைப்போல வானமும் 'தார்' பூசியதாகக் கறுப்பாகவே தெரிந்தது. எனக்கும் சாரதி கதிர்காமத்தம்பிக்கும் ஆளையாள் முகம் பார்ப்பது கூடக் கஸ்டமாய் இருந்தது. அவ்வளவு கும்மிருட்டு.

கதிர்காமத்தம்பி ஆசனத்தை விட்டுக் கீழேயிறங்கி 'லொறியின் பொனட்டைத் திறந்து, தான் சுருட்டுப்பற்ற வைத்திருக்கும் நெருப்புப்பெட்டியை எடுத்துக் குச்சியை ஒன்றன்பின் ஒன்றாக உரசித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் வெளிச்சத்தை உண்டாக்கிக் கொண்டு அந்த வெளிச்சத்தில் சிறிது நேரம் பழுது பார்த்தான். நான் 'லொறி'யின் முன்பக்க இடப்புற ஆசனத்தில் அசையாது அமைதியாக அமர்ந்திருந்தேன். 'டோர்ச்லைட்' இருந்திருந்தால் உதவியாயிருந் திருக்குமென மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். நல்ல காலம் கதிர்காமத்தம்பி சுருட்டுப் பற்றுவது இல்லாவிட்டால் நெருப்புப் பெட்டியும் இல் லாமல் இருந்திருக்கும்.

சிறிது நேரப் பழுதுபார்க்கும் முயற்சிக்குப் பின் கதிர்காமத்தம்பி சொன்னான், "சேர்! என்ன பிழையெண்டு தெரியிதில்ல. நீங்க லொறிக்குள்ள இரிங்க. நான் முன்னுக்கு நடந்துபோயித் தாண்டியடிக் கடையடில இரிக்கிற ஒன்டு ரெண்டு பேரக் கூட்டித்து 'டோர்ச்லைட்'டும் எடுத்திட்டு வாறன்".

அந்த நள்ளிரவு நேரத்தில் இருட்டுக்குள் அதுவும் சனநடமாட்டமே இல்லாத இடத்தில் தனித்திருக்க என் மனம் ஒப்ப வில்லை.

நான் சொன்னேன். "கதிர்காமத்தம்பி! போறெண்டா நாம ரெண்டுபேரும் போவம். இல்லாட்டி விடியுமட்டும் ரெண்டு பேரும் 'லொறி'க்குள்ளேயே இரிப்பம். விடிஞ்சாப் புறகு பாப்பம் என்ன செய்யிறண்டு. ஆளையாள் தனிய உட் டுட்டுப் போறவேலயெல்லாம் வேணாம்".

கதிர்கமத்தம்பிக்கு என் சொல்லைத் தட்ட முடியவில்லை. "அப்படியெண்டா சேர்! றோட்டுக் கொஞ்சம் முன்னால இறக்காமத்தான் இரிக்கி. நான் கதவத் துறந்து வைச்சுக்கொண்டு ஒரு கையால 'ஸ்ரியறிங்கை'ப் புடிச்சிட்டு மத்தக் கையால 'லொறி'யத் தள்ளிறன். நீங்க 'லொறி'க்குப் பின்னால போய்த் தள்ளுங்க. ஒரு மாதிரித் தாண்டியடிக் கடயடிக்குப் போய்த்தமெண்டாப் புறகு மிச்சத்தப் பாக்கலாம்" என்றான் கதிர்காமத்தம்பி. கதிர்காமத்தம்பியின் யோசனை எனக்குச் சரியாகப்பட்டது. உடனே நான் 'லொறி'யை விட்டுக் கீழிறங்கிப் பின்பக்கம் சென்று இரு கைகளாலும் 'லொறி'யைத் தள்ள ஆரம்பித்தேன்.

அப்போது எனக்குப் பக்கத்தில் கறுப்பு நாயொன்று நிற்பதைக் கண்டேன். அந்தக் கும்மிருட்டிலும் அது கறுத்த நாயென்பது எனக்குத் தெரிந்தது.

"அடி.." என்றேன். சற்றுத் தள்ளிப்போய் நின்றது. மீண்டும் நான் 'லொறி'யைத் தள்ளத் தொடங்கிய போது மீண்டும் அந்த நாய் எனக்கு அருகில் வந்தது. மீண்டும் "அடி.." என்றேன்.

இப்படி நான் "அடி.." என்று சத்தமிடுவதும் அந்நாய் சற்றுத் தள்ளிப் போய் நிற்பதும் மீண்டும் என்னருகில் வருவதும் நான் மீண்டும் "அடி.." என்பதும் இரண்டு மூன்று தடவைகள் நடந்தன. எனது சத்தத்தைக் கேட்ட கதிர்காமத் தம்பி "என்ன சேர் சத்தம்?" என்றான்.

"ஒரு நாயிராப்பா. திரத்த திரத்த வந்து நிக்கிது" என்றேன்.

"எங்க சேர்" என்று கேட்டுக் கொண்டு என்னருகில் வந்தான்.

"அந்தா நிக்கிது" என்று சொல்லி நாயைக் காட்டினேன்.

கதிர்காமத்தம்பி ஓரிரு நிமிடம் அமைதியாக இருந்து விட்டு "அடி!" என்று சத்தமிட்டு விட்டு "அது ஓடித்து சேர்! நீங்க தள்ளுங்க" என்றான்.

நான் பின்பக்கம் இரு கைகளாலும் 'லொறி'யைத் தள்ள முன்பக்கம் கதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்தம்பி 'ஸ்ரியறிங்'கை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மறு கையால் 'லொறி' யைத் தள்ள 'லொறி' நத்தை வேகத்தில் ஊரத் தொடங்கியது.

அப்போது, 'லொறி'யின் பின்பக்கம் என்னுடன் சேர்ந்து இன்னும் ஓரிருவர் தள்ளுவதைப் போல ஒரு அசுப்பை உணர்ந்தேன். வயல் மற்றும் சேனைப் பயிர்செய்கைக்கு காவலுக்குப் போகவந்தவர்கள் அல்லது சற்றுத் தூரத்தில் உள்ள காட்டுக்குள் வேட்டையாடச் செல்பவர்கள் அல்லது வேறு காரணங்களுக்காகக் காட்டுக்குள் சென்று திரும்புபவர்கள் எவராவது தானாகவந்து உதவுகிறார்களாக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன். இருட்டில் அவர்களின்முகம்தெரியவில்லையென்றே எடுத்துக் கொண்டேன். ஏனோ தெரிய வில்லை. அப்போது எந்த மனப் பயமும் என்னிடம் எழவில்லை. பயம் ஏற்பட்டிருந்தால் 'லொறி'யை விட்டுக் கீழே இறங்கியிருக்கவே மாட்டேன்.

'லொறி' முன்னே மெதுவாக உருளத் தொடங்கிச் சிறிது நேரத்தில் எதிர்த்திசையில் மட்டக்களப்பிலிருந்து தெற்கு நோக்கிப் பொத்துவிலுக்குச் செல்லும் இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான கடைசி 'பஸ்' 'லொறி'யை அண்மித்ததும் நிறுத்தப்பட்டது. அதிலிருந்து எமது திணைக்களத்தில் பொத்துவில் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தர் அபுசாலி இறங்கி வந்து, "என்ன கோபால் பிரச்சினை?" என்றார்.

நான் நடந்தவற்றைச் சொன்னேன். நாய்க் கதையையோ அல்லது அசுப்புக் கதையையோ நான் சொல்லவில்லை. அதைச் சொல்லவேண்டும்போல் அப்போது எனக்குப் படவுமில்லை.

பின் அபுசாலி 'பஸ்' சாரதியுடன் கதைத்து 'பஸ்' பயணிகள் சிலர் இறங்கி 'லொறி'யைத் தள்ளிக் கொண்டுபோய்த் தாண்டியடிக் கடைவரை சேர்த்து உதவியபின் தான் பொத்துவில் பயணத்தைத் தொடர்ந்தனர். அதுவரை 'பஸ்' சாரதி 'பஸ்'ஸை நிற்பாட்டியிருந்தான்.

நானும் கதிர்காமத்தம்பியும் ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே அன்றிரவை 'லொறி'க்குள்ளேயே கழித்தோம். இருவருக்கும் அன்று சிவராத்திரிதான்.

விடிந்ததும் கதிர்காமத்தம்பியை 'லொறி'யுடன் தாண்டியடியிலேயே விட்டு விட்டு நான் தனியே 'பஸ்'ஸில் கல்முனை சென்று அலுவலகம் போய் 'மெக்கானிக்' ஒருவரை ஏற்பாடு செய்து சில உதவியாளர்களுடன் எமது திணைக்கள 'ஜீப்' வண்டியில் தாண்டியடிக்கு அனுப்பிவிட்டு எனது வழமையான அலுவலக வேலையில் மூழ்கிவிட்டேன். பின்னேரம் மூன்றுமணி போல் கதிர்காமத்தம்பி 'லொறி'யுடன் அலுவலகம் வந்து சேர்ந்தான். என்னிடம் வந்தவன்.

"சேர்! உங்களிட்ட ஒண்டு கேட்கணும்" என்றான்.

"சரி! கேளு" என்றேன்.

"சேர்! நீங்க இரவு 'லொறி'யப் பின்பக்கம் போய்த் தள்ளக்குள்ள வேற ஆரும் சேந்து தள்ளிறாப்போல அசுப்புத் தெரிஞ்சதா?" என்றான்.

எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. அது எப்படி இவனுக்குத் தெரியும். நான் அதைப்பற்றி இவனிடம் சொல்லவேயில்லையே என்று நினைத்துக் கொண்டு "அதெப்படி உனக்குத் தெரியும்" என்றேன்.

"எனக்கும் அந்த அசுப்புத் தெரிஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதான் சேர். ஆனா நீங்க பயந்திடுவீங்கெண்டுதான் அப்ப நான் சொல்லல்ல. கறுப்பு நாய் வந்ததும் உண்மதான் சேர்." என்றான்.

அவனை நான் ஆச்சரியமாகப் பார்த்தபடி மௌனமாக இருக்க, அப்போது நிலவிய அமைதியை அவனது வார்த்தைகள் கிழித்துக்கொண்டு வந்தன.

"சேர், நீங்க கல்முனைக்கு வந்திட்டீங்க. தாண்டியடி ஊராக்கள் வந்து எல்லாக் கதயும் சொன்னாங்க" என்று கூறிக் கதையைக் கூறிமுடித்தான்.

அவன் கூறிமுடித்த ஊராட்கள் சொன்ன கதையின் சாராம்சம் இதுதான். லொறி 'ஸ்ராட்' நின்ற இடத்தில் சில மாதங்களுக்கு முன் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவன் விபத்தில் சிக்கி இறந்திருந்தான். அதன்பின்பு அவ்விடத்தில் இப்படியான மறிப்பு நிகழ்வுகள் அடிக்கடி நடக்கும். ஒரு சிலர் 'பேய்' அடித்தும் இறந்துள்ளனர். இன்னும் சிலர் தப்பிவந்தாலும் பின் காய்ச்சல் வந்து பலநாட்கள் படுத்த படுக்கையுமாகியுமுள்ளனர். நல்லகாலம் நாம் தப்பி வந்து விட்டோமென்று ஊராட்கள் கூறியுள்ளார் கள். நான் பயப்படாமல் இருந்தது நல்ல தாகப் போய்விட்டதாம்.

இதை நம்புவதா? இல்லையா? என்பது எனக்குத் தெரியவில்லை. வழமையாகப் பேய்-பிசாசு-பில்லி-சூனியம் என்பவற்றில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. கதிர்காமத்தம்பி மீண்டும் கதையைத் தொடர்ந்தான்.

"சேர்! நமக்குத் தெரியாம நாம ஆபத்தில இரிக்கக்கொள்ள சில நல்ல ஆவிகள் நமக்கு உதவவருங்கள். கெட்ட ஆவியிலிருந்து நம்மளக் காப்பாத்தத்தான் அந்த நல்ல ஆவிகள் வாற. அந்தக் கறுப்புநாய் உங்களுக்கு உதவத்தான் வந்தது சேர்" என்றான்.

இதுவரைக்கும் எழுதிமுடித்த நான் சிறுகதையை எப்படி நிறைவு செய்வதென்று சிந்தித்தேன். கதிர்காமத்தம்பி மட்டக்களப்பு களுதாவளை ஊரைச் சேர்ந்தவன். அவனது ஊர் மாந்திரீகத்துப் பேர்போனது. தனக்கும் ஓரளவு மந்திரம் தெரியுமென்று முன்பொரு தடவை பேச்சுவாக்கில் என்னிடம் கூறியுமிருக்கிறான். மந்திரம் சொல்லித்தான் கறுப்புநாயை விரட்டியிருப்பானோ? உதவி செய்யவந்த நாயை ஏன் விரட்டப்போகிறான்? இல்லை! என் கண்களுக்குக் கறுப்புநாயை மந்திரம் சொல்லி மறைத்திருப்பானோ? ஓரிரு நிமிடங்கள் அமைதியாக இருந்தபோது வாய்க்குள் ஏதோ முணுமுணுத்த பின்தானே என்னிடம் "நாய் ஓடிற்று" என்றவன். நான் பயந்துவிடக்கூடாதென்று நினைத்திருப்பான். இப்படியாக என் சிந்தனை குறுக் குமறுக்கும் ஓடிற்று. பின் சிறுகதையைப் பின்வருமாறு முடித்தேன்.

கதிர்காமத்தம்பி கூறியதை நம்புவதா? இல்லையா? என்று எனக்குக் குழப்பமாயிருந்தது. ஆனால் நான் அடைந்த அனுபவம் உண்மையானது. கதையின் கடைசிவரிகளை இவ்வாறு எழுதி முடித்தபின் கீழே கதை எழுதப்பட்ட தாளின் வலதுபுற ஓரத்தில் அடைப்புக் குறிக்குள் 'யாவும் கற்பனையல்ல' என்று போட்டேன்.

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றால்தான் பிள்ளையா?

**ஜீவநதியில் தன் முதலாவது சிறுகதையுடன் ஆரம்பித்து சிறுகதை மஞ்சரியில் அவரது பயணம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவர் வவுனியாவில் உள்ள பண்டாரவன்னியன் புத்தகசாலை உரிமையாளரின் மனைவியாவார். கவிதைகள் எழுதுவதிலும் வல்லவர். நல்ல பேச்சாளர். அமைதியான விமர்சகர். நம்பிக்கைக்குரிய படைப்பாளி. விரைவில் அவரது சிறுகதைத்தொகுப்பு வெளியாகும் சாத்தியம் அண்மித்து வருகிறது**



**அகரா**

"புறோக்கர் மாப்பிளைன்ர குறிப்பும் போட்டோவும் கொண்டுவந்து அம்மாட்ட குடுத்து "பொருத்தத்தப் பாத்திட்டுச் சொல்லுங்கோ மிச்சத்தப் பிறகு கதைப்பம்" எண்டு சொல்லிப்போட்டு வெளிக்கிடும் வரைக்கும் கதவுக்குப் பின்னால நிண்டு கேட்டுக் கொண்டிருந்தன். புறோக்கர் அங்கால போன உடனயே ஓடிப்போய் அம்மாட்ட போட்டோவ வாங்கிப் பாத்தன். அப்பவே மாப்பிளையப் பிடிச்சுப்போச்சு. பின்னேரம் குறிப்புக் கொண்டுபோய் பாத்திட்டு வந்து வழக்கம் போல பொருத்தமில்லை எண்டு சொல்லிக் கொண்டே சலிப்போட ஈசிச்சியார்ல சரிஞ்சிட்டார் அப்பா. நான் அம்மாட்ட மூண்டு நாளா அடம்புடிச்சதால அம்மா, அப்பாவ ஒரு மாதிரிச் சமாளிச் சிட்டு குறிப்புப் பொருத்தம் எண்டு புறோக்கரிட்ட சொல்ல அத நம்பின மாப்பிள வீட்டுக்காரரும் கலியாணத்துக்கு ஓம் எண்டுட்டினம். பிறகென்ன ஒரு மாசத்துக்குள்ள எல்லாப் பேச்சு வார்த்தைகளும் முடியக் கலியாணமும் முடிஞ்சுது. நாலாஞ்சடங்கு முடிஞ்சு பிறந்த வீட்டை விட்டு அழுது கொண்டே கணவரோடு புறப்பட்டு வந்தது இப்ப நடந்த மாதிரி இருக்கு. அதுக்குள்ள பத்து வருஷங்கள் போனதே தெரியேல". இப்படி வாய் நிறைந்த சிரிப்போடு சொல்லிக் கொண்டிருந்தார் அபிராமி அக்கா. இதையெல்லாம் கேட்டுக் கொண்டே தோளில் வளர்த்திய குழந்தையை முதுகில் தட்டித் தூங்க வைத்துக் கொண்டே அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த அபிராமி அக்காவின் கணவர் "உந்தக் களவெல்லாம் பிறகொருக்காப் பலன் பாக்கப் போகேக்க எல்லோ பிடிபட்டது" என்று சொல்லிச் சிரித்தார். "குறிப்புப் பொருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாட்டிக்கும் பத்து வருசங்களத் தாண்டி வெற்றிகரமா வாழுறீங்கள் எண்டா உந்தக் குறிப்பெல்லாம் பொய்தானே!" என்று இருவரையும் பார்த்துக் கேட்டேன். "அதென்னவோ உண்மைதான், பிரச்சன வராம இல்ல ஆனா சமாளிச்சுப் போறம். சந்தோசமா இருக்கிறம். ஆனா பிள்ளையில்லாத ஒரு குறைதான் இத்தன வருசமா பெருங்கவலையாக இருந்தது. இப்பதான் நிம்மதியா இருக்கிறம்" என்று சொல்லிக் கொண்டே தேனீர்க் குவளையை என்னிடம் நீட்டினார். தேனீரும் அவரின் எப்பொழுதும் புன்னகை கலந்த பேச்சுப் போலவே இனித்தது.

நான் ஏழாலை அமெரிக்கன் மிஷனில் ஆரம்பக்கல்வி கற்றபோது தினமும் காலை உணவு தயாரித்த பின்னர் அம்மாவை நிறைந்த பூக்களை கொய்துகொண்டு வருவார். நித்திய கல்யாணி, பொன்னொச்சி, செவ்வரத்தை என்று பல நிறங்களின் கலவையிலுள்ள பூக்களில் அரைவாசியை அருகில் இருக்கும் நாகபூசணி அம்மன் கோயிலில் கொடுத்து விட்டு மிகுதிப்பூக்களோடு பாடசாலை நோக்கிப் புறப்படுவேன். கொண்டு சென்ற மிகுதிப் பூக்களை பாடசாலைக்கு அருகில் உள்ள ஆட்டோக் கடையில் கொடுத்தால் இரண்டு தேசிப்பழ இனிப்புக் கிடைக்கும். அதுவும் பூக்கொடுக்கும் போது ஆட்டோக்கடை அன்ரி நிற்க வேண்டும். அங்கிள் நின்றால் இனிப் புக் கிடைக்காது. பெரிதாக பொருட்கள் இல்லாத பாடசாலை மாணவர்களுக்கான இனிப்புக்கள் மட்டுமே உள்ள கடை அது. பாவனை மிகக் குறைந்த ஆட்டோ ஒன்று அவர்களிடம் நிற்பதால் நாங்கள் ஆட்டோக்கடை என்று பெயர் வைத்தோம். அவர்களின் வீட்டு மதிற் சுவரோடு ஒரு குட்டிப்பிள்ளையார் சிலை இருக்கும். நான் கொண்டு செல்லும் பூக்களைப் பெற்றுக் கொண்டு எனக்கு தேசிப்பழ இனிப்பு கிடைக்கும்படி அருள்பாலித்தவர் அந்தப் பிள்ளையார் தான். அவர்தான் பிள்ளைகள் இல்லாத அந்தத் தம்பதியினரின் செல்லப்பிள்ளை. எப்பொழுதும் கவலை தோய்ந்த முகத்துடன் மிக அமைதியாக இருப்பார் ஆட்டோக்கடை அன்ரி. ஆனால் அவருக்கு எதிர்மாறாக அங்கிள் சிடுசிடுத்த முகத்துடன் எங்களை எல்லாம் பயமுறுத்தும் தொனியுடனும் பேசுவார். இவர்கள் இருவருடைய வெறுமையான வாழ்க்கைக்குக் காரணம் குழந்தையின்மையே என்று நான் தெரிந்து கொள்ளும் வயதில் அவர்கள் இந்த உலகைவிட்டு விடைபெற்றுக் கொண்டார்கள். பூமியிலே பல குழந்தைகள் அநாதைகளாக இருக்கிறார்களே! அவர்களில் ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்த்து வாழ்வை அழகாக்கியிருக்கலாமே ஏன் இப்படி வெறுமையாக வாழ்ந்து இறந்து போனார்கள் என்று எண்ணியிருக்கிறேன். இவர்கள் இப்படியிருக்க அதே சம காலப் பகுதியில் நான் பார்த்த இன்னொரு தம்பதி கணேசரும் மனைவியும். இப்படிச் சொன்னால் யாருக்கும் விளங்காது. "குண்டுக் கணேசரும் மனிசியும்" என்று சொன்னால் ஊரிலே எல்லோருக்கும் தெரியும். மூளைச் செயற்பாடு சற்றுக் குறைந்த இருவரையும் யார் சேர்த்து வைத்தார்களோ தெரியாது. கணேசர் ஆணுறுப்பு தெரிய சறத்தை இரண்டாக மடித்துக் கட்டிக் கொண்டு மனைவியை முன் பாரில் ஏற்றிக்கொண்டு சைக்கிளோடும் போது அந்த வீதியால் பாடசாலை சென்று வரும் நாங்கள் கூச்சலிட்டுச் சிரிப்போம். எங்களின் சிரிப்பும் கூச்சலும் ஏற்படுத்திய கோபத்தில் கணேசரின் வாயில் உலகிலுள்ள அத்தனை கெட்ட வார்த்தைகளாகக் கருதப்படும் பெண்ணுறுப்புக்களும் வரவே நாங்கள் ஓட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிடித்துவிடுவோம். ஒருமுறை கணேசர் எங்கள் வீட்டினருகில் உள்ள தோட்டமொன்றில் கூலிக்கு நீர் இறைத்துக் கொண்டிருக்க அங்கு வந்த அவருடைய மனைவி "கூய்... மனுசன், கூய்... மனுசன்" என்று கணவரை கைதட்டி அழைத்ததைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்திருக்கிறேன். அவர்கள் இருவருக்கும் கூட குழந்தைகள் இல்லாத ஒரு வெறுமையான வாழ்க்கை தான். அவர்களுக்கு எடுத்துச் சொல்லி விளக்க யாருமிருக்கவில்லை போலும். இவர்கள் இருவரும் எங்கிருந்து வந்தார்கள் பின்னர் எங்கே சென்றார்கள் இப்போது இருக்கிறார்களா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை.

இப்படி இவர்களைப் போல் இன்னும் பலர் திருமணமாகி குழந்தை இல்லாமல் சொந்த பந்தங்களுடைய சிலேடைப் பேச்சுக்களையும் நக்கல் நையாண்டிகளையும் தாங்கிக்கொண்டு வேதனையுடன் வெறுமையாக வாழ்வை வாழ்ந்து முடித்திருக்கிறார்கள், இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

அபிராமி அக்காவும் கணவரும் கூட இத்தனை நாளாக வெறுமையாகத்தான் வாழ்ந்தார்கள். உறவினர்களின் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதைக் குறைத்திருந்தார்கள். கோயில் திருவிழாவில் கூட இவர்களைக் காண்பதும் மிக அரிது. யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வெளிமாவட்டம் ஒன்றில் குடியேறி விட்டதாக நான் அறிந்திருந்த போதிலும் இன்றுதான் அவர்களுடைய வீட்டுக்கு முதன்முதலாக வந்துள்ளேன். "ஏன் அக்கா இந்த பத்து வருசத்திலயும் வைத்தியம் ஒண்டும் செய்யேலயோ?" என்றேன்.

"ஏன் செய்யேல? செய்யாத வைத்தியம் இல்ல, கடசியா இணுவில் பரியாரியாரிட்ட செய்த வைத்தியம் சரி வந்தது. மூண்டு மாசமா எவ்ளோ ஆசையோட சுமந்த கரு. எக்கச்சக்கமான ஊசி மருந்துகள ஏத்தி கால் தொடை ரண்டும் புண்ணாகி உடம்பும் ஊதிக் கொண்டு வந்திட்டு. குழந்தை ஒண்ட பெத்திட்டாக் காணும் எண்டு எல்லாத்தையும் பொறுத்துக் கொண்டன். பத்து லட்சத்துக்கு மேல செலவாகினது தான் மிச்சம்..." என்று சொல்லிய போது அவ்வளவு நேரமும் புன்னகை தவழ்ந்த முகம் சோகத்தை நிறைத்துவிட்டது. "மூண்டாவது மாதச் செக்கப்பில குழந்தை கற்பப்பைக்கு வெளியேயுள்ள குழாயில் தங்கிவிட்டது என்று சொல்லிக் கருவை உடனடியாக அழித்தது எந்தத் தாய்க்கும் வரக்கூடாத வேதனை" என்றவாறே கண்ணீரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்துக்கொண்டார்.

ஆறுதல் எப்படிச்சொல்ல முடியும்? சிறிது நேரத்தை மௌனம் விழுங்கிக் கொண்டது. "கடவுள் எனக்கு எழுதினது அவ்வளவுதான் எண்டு விட ஏலுமோ! அதான் இந்த முடிவு" என்று மௌனத்தை உடைத்தார் அபிராமி அக்கா.

"நல்ல முடிவக்கா, நிறையப்பேர் தயங்கிற விஷயத்த தைரியமாச் செய்திருக்கிறீங்கள். இனிச் சந்தோசமா இருங்கோ. ஆனா உங்கள் இரண்டு பேருக்கும் பூரண சம்மதம் தானே? என்றேன்.

"நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து நிறைய நாட்கள் யோசிச்சு எடுத்த முடிவு இது" என அக்காவின் கணவர் அக்காவை முந்திக்கொண்டு சொன்னது பல கணவன்மாரிடம் மனப்பூர்வமாக எதிர்பார்க்க முடியாத பதிலாகும். மனைவியால் இனிக் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொண்ட கணவன், மனைவிக்கு ஆறுதலாக இருப்பதும் இருவரும் சேர்ந்து குழந்தை ஒன்றைத் தத்தெடுத்து வளர்க்க முடிவெடுத்து செயற்படுத்தியிருப்பதும் உண்மையில் மகிழ்ச்சியாகவே இருந்தது. இக்குழந்தையை எங்கிருந்து பெற்றார்கள், யாருடைய குழந்தையாக இருக்கும் என்ற பல கேள்விகள் சபைக்கு நாகரீகமற்றவை என்பதால் வாய் வரை வந்த சொற்களைத் தொண்டைக்குழிக்குள் அடக்கி விழுங்கிக் கொண்டேன்.

"இனியும் இங்கதான் இருக்கப் போறீங்களோ அல்லது ஊருக்குப் போகப்போறீங்களோ?" என்றேன்.


"பிள்ளைய நல்லபடியா வளர்த்தெடுக்கும் வரைக்கும் எங்கயும் போற ஐடியா இல்லை, ஊரில எங்கட சனத்தப்பற்றித் தெரியும் தானே! என மீண்டும் அதே புன்னகையுடன் சொல்லிக்கொண்டு கணவனின் தோளில் உறங்கிவிட்ட பிள்ளையை 'அம்மாட்ட வாடா என்ர ராசா..." என்று அள்ளி அணைத்துச்சென்று கட்டிலில் வளர்த்தி விட்டு வந்தார் அபிராமி அக்கா.

இரண்டு தவணை வழக்கு விசாரணை முடிந்துவிட்டதால் குழந்தையை தங்களிடம் தந்துள்ளதாகவும் இன்னும் ஒரு தவணை விசாரணை இருப்பதாகவும் அதற்குப் பிறகுதான் பிள்ளை எங்களுக்கு முழுமையாகச் சொந்தமாகும் என்றார் அக்கா. எதற்காக வழக்கு? எனக்கு எதுவும் புரியவில்லை..... தந்தையை இழந்து தாயார் வெளிநாட்டில் தொழில்புரியும் பதினேழு வயதான சிறுமி ஒருவர் சிறுவர் இல்லம் ஒன்றில் வளர்ந்து வந்துள்ளார். அச்சிறுமி விடுமுறைக்காக உறவினர் வீட்டுக்குச் சென்றுவந்தபோது பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளாகி கற்பமாகிப் பிரசவித்த குழந்தையே இவர்கள் தத்தெடுத்த குழந்தை. அச்சிறுமிக்கு இன்னும் இரண்டு மாதங்களில் பதினெட்டு வயதாக விருப்பதால் இரண்டு மாதங்களின் பின்னர் மூன்றாவது விசாரணை என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கரு கருவென்று அழகாக மினுங்கும் தேகமும் பெருத்த இரு விழிகளும் சிவந்த இதழ்களும் சுருண்ட அடர்த்தியான முடியுமாக அபிராமி அக்காவின் கணவருடைய தோள்களில் சாய்ந்து என்னை விட்டு விடாதீர்கள் என்று சொல்வதுபோல அவரின் பிடரித் தலைமுடியை தன் பிஞ்சு விரல்களால் இறுக்கிப் பிடித்து தூங்குகிறான் உலகறியாத அந்தப் பாலகன். இவன் இவர்களிடம் நன்றாக வளரப் போகிறான் ஆனால் அந்தச் சிறுமியின் தற்போதைய நிலை என்னவாயிருக்கும்! தாயார் வந்து சிறுமியைப் பொறுப்பேற்றாரா! இல்லையா! என விடை தெரியாத வினாக்களோடு அங்கிருந்து விடை பெற்றேன்.

இரண்டு மாதங்கள் முடிந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ந்த வழக்கு ஆறாவது மாதத்தில் முடிவுக்கு வந்தபோது குழந்தையை கையளிப்பதில் பூரண சம்மதம் எனத் தெரிவித்து கைகளை கூப்பி நன்றி சொல் லிக் கண்ணீரோடு விடைபெற்றாள் இப்போது பதினெட்டு வயதாகிவிட்ட அந்தப் பெண். பெற்றவ ளால் இன்னமும் தேடப்படாத அவள் திருமணமாகாமல் தான் பெற்றெடுத்த பிள்ளையையும் தத்துக்கொடுத்துவிட்டு நடைபிணமாகத் தனியே புறப்பட்டபோது ஓடிச்சென்ற அபிராமி அக்கா அவளிடம் எதையோ அவசரவச ரமாகச் சொல்லிவிட்டு அவளுடைய கைகளுக்குள் சிறிய பொதி யொன்றைத் திணித்துவிட்டு வந்தார். நீதிமன்ற உத்தரவின்படி இவர்கள் இரு தரப்பும் எந்தத்தொடர்பும் பேச்சுவார்த் தையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதாலேயே அப்படி ஒரு அவசர உரையாடல். நம்பிக்கைக்குரிய உறவு களால் பலாத்காரம் செய்யப்பட்ட இவ ளைப் போல் இன்னும் பல பிள்ளைகள் வெளியே சொல்லத்தயங்கி முடங்கிக் கிடப்பதும் பின்னாட்களில் வாழ்வைத் தொலைத்து விடுவதும் வேதனைக்குரிய தொன்றே. இத்தகைய குழந்தைகளை அரவணைத்து காப்பாற்றிவரும் இல்லங் களின் சேவைகளும் அளப்பரியவை. வறிய குழந்தை களையும், பெற்றோரை இழந்த பிள்ளைகளையும், கணவரை இழந்த பெண்களையும், பராமரித்துவரும் இன்னொரு இல்லத்திற்கு அப்பெண் பிள்ளை மாற்றப்பட்டு உயர் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்ட தாகப் பின்னாளில் அறியக் கிடைத்ததில் மனம் கொஞ்சம் ஆறுதல் அடைந்தது . நம்நாட்டின் பிள்ளை தத்தெடுத்தல் தொடர்பான சட்ட திட்டங்களுக்கமைய அனைத்து விடயங்களையும் சரிவரச் செய்துமுடித்து சட்டபூர்வமாகத் தங் களை அக்குழந்தையின் பெற்றோராகப் பதிவு செய்துகொண்டார்கள் அபிராமி அக்காவும் கணவரும். குழந்தை பிறந்து நான்காவது மாதத்தில் ஆரம்பித்த வழக்கு பத்தாவது மாதத்தில்நிறைவடைந்தபோது பத்துமாதங்கள் கருவில் சுமக்காத வலியை நெஞ்சில் சுமந்த அபிராமி அக்கா பிரசவத் தின் பின்னர் வைத்தியசாலையை விட்டுச் செல்வது போல நீதிமன்றத்தை விட்டு மகிழ்வாக குழந்தையை அள்ளி அணைத் துக்கொண்டு புறப்பட்டார். நாங்கள் தத்தெடுத்த குழந்தையை பெற்றெடுத் தவள் கூட எங்களுடைய பிள்ளை போலத்தானே!

கோடி கொட்டிக் கொடுத்தாலும் ஈடாகாது. ஆனால் அப்பெண் பிள்ளை யைப் பெற்றவள் இன்னும் கூடத் தேடி வரவில்லையே, அவளுடைய எதிர்காலம் சிறக்க கடவுள்தான் துணையிருக்க வேண் டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டே வந்த அபிராமி அக்காவின் பிள்ளையின் எதிர்காலம் கண்முன்னே தெரிந்தது.

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயவிடம்



பாடசாலைக் காலம் முதல் எழுதுவதில் ஆர்வம் கொண்ட பிரசாந்தி காலப் போக்கில் கவிதை சிறுகதை கட்டுரை என பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பல ஆக்கங்களை இன்றுவரை எழுதி வருகிறார். 2021 ஆம் ஆண்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் சிறுகதைக் கான இளங்கலைஞர் விருதினையும் பெற்றுள்ளார். பல போட்டிகளில் பங்கு பற்றி பல பரிசில்களும் பெற்றுள்ளார்.



**பிரசாந்தி ஜெயபாலன்**

'டிங்....டாங்...டிங்....டாங்..' என விட்டு விட்டு ஒலித்த மாதா கோயில் மணி யோசை நேரம் மாலை 6.00 ஆகியதை உணர்த்தியது. நேரம் எத்தனை ஆகினாலும் நமக்கு எப்போதும் ஓய்வில்லை என்பதாய் 'பச்சை' வர்ணம் தீட்டப்பட்ட அந்த வைத்தியசாலைக் கட்டடத்தினுள்ளே நோயாளர் தவிர்ந்த ஏனையோர் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தனர். பல்வேறு வகையான வியாதிகளுடன் முணு முணுப்பும், அழுகையும், ஏக்கமும், அங்க லாய்ப்பும் கலந்து வைத்தியசாலைக்கே உரிய தனித்துவமான மருந்து நெடியுடன் கூடிய நோயாளர் விடுதிகளைத்

தாண்டி எதிரே இருந்த வராந்தாவின் மத்தியில் சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்த அறைவாசலின் முகப்பிலே பொறிக்கப்பட்டிருந்த 'அவசர சிகிச்சைப் பிரிவு' என்கின்ற எழுத்துக்கள் அதைக் கடந்துபோவோர் மனதிலும் ஒருகணம் துயரத்தை விதைத்தவாறு தொங்கிக் கொண்டிருந்தது. உடலெங்கும் ஆங்காங்கே கட்டுக்களுடனும், பெண்மைக்கேயுரிய மென்மையான பாகங்கள் முழுதும் குருதி கசியும் கீறல் காயங்களுடனும், மிரண்ட மான்விழிகள் இரண்டும் வேதனையால் வெளிறிப் போய் முகட்டு வளையில் குத்திட்டு நிற்க, மூக்கிலும் வாயிலுமாய் செயற்கைச் சுவாசத்திற்காய் பொருத்தப்பட்ட குழாய்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவின் கட்டிலில் வதங்கிப் போன கீரைத்தண்டாய் வளர்த்தி வைக்கப்பட்டிருந்தாள் அந்தப் பச்சிளம் பாலகி. அவளைச் சுற்றிலும் பச்சை, நீல வர்ண உடைகளுடன் முகங்களை மறைத்த கவசங்களுடனும் கழுத்தில் தொங்கும் உபகரணங்களுடனும் கைகளில்

அணிந்த கையுறைகள் தாங்கிய கருவிகளுடனும் பரபரப்பாய் இயங்கிக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும் வைத்தியர்களையும், தாதிகளையும் அவள் ஒரு பொருட்டாகவே கருதாது கட்டிலின் மேலே தெரிந்த விட்டத்தை வெறித்துக்கொண்டிருந்தாள். உடலிலுள்ள குருதியை முழுவதும் வெளியேற்றி விட்டு வாய் பிளந்து கொண்டிருந்த நிணம்கசியும்காயங்களும் அவற்றிலே புகுந்து வைத்தியக் கருவிகள் புரியும் சிகிச்சைகள் எதுவும் அவளுக்கு எவ்விதமான வலியையும் உண்டு பண்ணவில்லை என்கின்ற பாவனையிலே சலனமற்றுக் கிடந்த அவளின் விழிகளில் அப்பிக்கிடந்த அளவற்ற துயரம் அவள் அனுபவித்த மிகப்பெரும் வலியையும் அதன் விளைவாய் உணர்வுகள் மரத்துப் போன அவளது நிலையையும் தெளிவாய் உணர்த்தியது.உலகத்து துயரெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தன் தலையை அழுத்துவது போன்ற தோரணையில் இரு கைகளாலும் தலையைத் தாங்கியவாறு அவசர சிகிச்சைப் பிரிவின் வாசலில் போடப்பட்டிருந்த வாங்கில் உட்கார்ந்திருந்த கோமதியின் விழிகள் மழையெனப் பொழிந்து தரையை நனைத்த வண்ணம் இருந்தது. அவளுக்கு சற்றுத் தள்ளி மூடப்பட்டிருந்த அறை வாசலையே உற்றுப்பார்த்தவாறு இடையிடையே தன் இடதுபக்க நெஞ்சை வலக்கையால் நீவிவிட்டவனாய் அங்கு மிங்கும் குட்டி போட்ட பூனை போல் நடைபயின்று கொண்டிருந்தான் கணேசன்.

“கடவுளே!.... என்ர ராசாத்தி.. என்ர மாம்பழம்... என்ர பொன்வண்டுக்கு ஏனிந்தக் கொடுமையப்பா? என்ர அம்மாளாச்சியே! உனக்கு கண் இல்லையோ? நீயும் வெறும் கல்லுத்தானோ? ஐயோ..! என்ர ராசாத்தி..!” எனத் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு ஓலமிட்டபடி பருத்த தனதுடலை இழுத்தவாறு அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள் பார்வதிப் பாட்டி. பாட்டியின் ஓலத்தைக் கேட்டதும் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்த கணேசன்சுவரைப் பிடித்தவாறு தன் மாமியாரை எதிர்கொள்ளும் சக்தியற்று மௌனமாய் மருகினான். தலைகுனிந்தபடி கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த கோமதியோ தன் தாயாரைக் கண்டதும் ஓடிச்சென்று கட்டியணைத்தவாறு கதறத் தொடங்கினாள்.

“அம்மா என்ர செல்லத்தப் பாரண.... என்னத்த நான் சொல்ல... பெத்த வயிறு பத்தி எரியுதண என்ர அம்மா... என்ர ஐயோ... என்ர ஒரேயொரு பொம்பிளக் குஞ்சயே பாதுகாக்கேலாத பாவியா போனனே.... என்ர அம்மாச்சி...” என அவள் போட்ட சத்தத்தால் அந்தக்கட்டடமே ஒரு கணம் அதிர்ந்தது.

‘அம்மா! இதென்ன உங்கட வீடெண்டு நினைச்சியளோ? இப்பிடிக் கூச்சலிட்டால் மற்ற நோயாளியளின்ர நிலமை என்னாகிறது? ஆ... தயவு செய்து சத்தம் போடாதேங்கோ...’ என அங்கு ஓடிவந்த தாதி அதட்டியும் அடங்காது அவர்களின் அழுகையும் ஆரவாரமும் அதிகரிக்கவே ‘இஞ்ச பாருங்கோ அம்மா... இனி நீங்கள் ஒருத்தரும் இதில இருக்கேலாது. வெளியில போங்கோ... கெதியா போங்கோ..’ என சொல்லி வாய் மூடுவதற்குள் பார்வதிப் பாட்டியும், கோமதியும் சேலைத்தலைப்பை வாயிலிட்டு அழுத்தியவர்களாய் அதனையும் மீறி எழும் கேவலையும் அடக்கிக் கொண்டு பரிதாபமாய் கையாலாகாத்தனத்துடன் இருக்கையில் அமர்ந்தனர். தான் பிரயோகித்த அஸ்திரம் குறி தப்பவில்லை என்கின்ற திருப்தியுடன் திரும்பிய தாதியின் மனதிலும் பாறாங்கல்லாய்த் துயரம்..

காடையர்களால் சூறையாடப்பட்டு இதழ்கள் பிய்த்து சிதைக்கப்பட்ட பூக்குவியலாய் அந்தப்பாலகி வைத்திய சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அனுமதிக்கப்பட்ட கோலத்தை அருகிலிருந்து பார்த்த அவளுக்கே இன்னும் உடம்பில் நடுக்கம் குறைய வில்லை. பத்து மாதம் கனவுகளுடன் சுமந்து பெற்றெடுத்து பொத்தி வளர்த்த அவர்களின் துயரம் எத்தகையது என் பதை உணர்ந்த அவள் கனத்த மனதுடன் தன் கடமையை சரியாய் செய்த நிறை வுடன் நடுங்கும் கால்களை நிதானப்படுத் தியவளாய் நடந்து கொண் டிருந்தாள். வெளியே வராந்தாவில் இருந்தவாறு தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்திய பார்வ திப் பாட்டி மகள் கோமதியைப் பிடித்து உலுக்கத் தொடங்கினாள். 'எப்படீடி இது ஆச்சு என் பிள்ளைக்கு... எங்கடீ தனியா விட்டியள் என் தங்கத்தை..' இந்தக் கேள்விகளை நேற்றிலிருந்து கேட்டுக் கேட்டு வாக்குமூலம் அளிப்பது போல் பதில் கூறிக் கூறிக் களைத்திருந்த கோமதியின் மனம் நடந்த சம்பவங்களை மீளவும் அசைபோட்டு தாயாரிடம் ஒப்புவித்தது.

கோமதியும், கணேசனும் வீட்டாரின் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்து தனிக்குடித்தனம் போய் கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்கள் ஆகியிருந்தன. கோமதி வங்கி ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தாள். கணேசனோ படித்த படிப்புக்கு எந்த வேலையும் கிடைக்காது விரக்தியுற்ற நிலையில் கூலி வேலைக்குப் போய்க்கொண்டிருந்தான். எனினும் அவர்களது காதல் வாழ்விற்கு எவ்வித குறையுமே இருக்கவில்லை. காதலாகிக் கசிந்துருகிய இரு வருட இல்வாழ்வின் பயனாய் வந்து பிறந்தவள் தான் இனியா. குழந்தை பிறந்த ஆரம்ப காலங்களில் சொந்த பந்தங்களின் உதவியற்று இருவரும் திண்டாடிப் போயினர். அப்ப டித்தான் அன்றொரு நாள் ஒரு கையில் வழுகி வழுகி நழுவும் குழந்தையுடனும், மறுகையில் மளிகைச் சாமான்கள் அடங்கிய பையுடனும் வேகாத வெயிலில் நடந்து கொண்டிருந்த மகளைக் கண் டதும் தாய்ப்பாசம் மேலிட ஓடிச்சென்ற பார்வதிப் பாட்டி 'இங்க கொடுடீ குழந்தையை' என வாங்கிக் கொண்டாள். மகளின் கஷ்டத்தைப் போக்குவதற்காகவே குழந்தையை கையில் வாங்கிய பார்வதிப் பாட்டி பொக்கை வாய் திறந்து தன்னைப் பார்த்து சிரித்த இனியாவின் முகத்தைப் பார்த்ததுமே மகள் மீது கொண்டிருந்த கோபம் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டாள். அன்றிலிருந்து இந்தச் சம்பவம் நடப்பதற்கு ஒரு மாதம் முன்னர்வரை பார்வதிப் பாட் டியே இனியாவிற்கும் தாயானாள். கோமதியும் நிம்மதியாய் வேலைக்குச் சென்று கொண் டிருந்தாள்.

இந்த சந்தோசமும் நிம்மதியும் நீண்ட நாள் நிலைக்கவில்லை. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் பாட்டியின் அரவணைப்பில் இனியா வளர வளர கணேசனின் நடத்தையிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. 'ஒரு ஆண் திருந்திக் கொண்டு வருகிறான் என்றால் அவனது பெண்பிள்ளை வளர்ந்து கொண்டிருக்கிறாள் என்று அர்த்தம்' என்று பேசும் வழக்கையே கோமதி அறிந்திருந்தாள். ஆனால் அவளது வீட்டிலோ எதிர்மாறாக கணேசன் தீய பழக்கவழக்கங்கள் பலவற்றிற்கு அடி மையாகத் தொடங்கினான். அவனது நட்பு வட்டம் பெரிதாகி போதைப் பொருட்கள் விற்பவர்கள் வரை சென்று ஈற்றில் கணேசனையும் போதைக்கு அடிமையாக்கியது.

கோமதியும் தன்னால் இயன்றவரை கணேசனைத் திருத்தப் பாடுபட்டாள். அழுதாள், புலம்பினாள், பேசினாள், திட்டினாள், உண்ணாவிரதம் இருந்தாள், சமையலறைக்கு ஓய்வு கொடுத்தாள், படுக்கையறையைப் பகிஸ்கரித்தாள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமே கணேசனை அசைக்கவில்லை. வீடு வரை கணேசனின் கூடாநட்பு தொடரவே வெகுண்டெழுந்த கோமதி விவாகரத்து வரை சென்றதால் கணேசன் அன்றுடன் தன் அத்தகைய நட்பை தெருமுனை வரை நிறுத்தியிருந் தான். இது அவனது மாற்றத்திற்கான அறிகுறியென எண்ணிய கோமதியும் பழையபடி கணேசனின் மேல் காதலைப் பொழிந்தாள்.

கோமதியின் வாழ்வில் புயல் ஓய்ந்து மீண்டும் அமைதியுறத் தொடங்கியதாக பார்வதிப் பாட்டியும் இனியாவும் மகிழ்ந்தி ருந்த ஒரு அதிகாலைப் பொழுதில் சிவந்த கண்களுடன் வராந்தாவுக்கு வந்த கோமதி பார்வதிப் பாட்டியை ஏதேதோ காரணம் கூறி தன் வீட்டிலிருந்து அனுப்பி விட்டாள். இனியாவை ஒவ்வொரு கிழமையும் தானே கொண்டு வந்து காட்டுவதாகவும் மறந்தும் கூட தன் வீட்டுப்பக்கம் தாயாரை வர வேண்டாம் என கலங்கிய கண்களுடன் தீர்க்கமாய் கூறிய மகளைக் கண்டு பதறிப் போன பார்வதிப் பாட்டி மகளின் பாசத்தை எள்ளளவும் சந்தேகிக்காது ஏதோ விசயம் இருப்பதாக ஊகித்துக் கொண்டு இனியாவைக் கட்டியணைத்து விழிநீர் பெருக விடைபெற்றுச் சென்று இன்று சரியாக ஒரு மாதம்தான் ஆகின்றது.

அன்று வழக்கம் போல் வேலையால் வீடு திரும்பிய கோமதிக்கு உடல் என்றைக்கு மில்லாதவாறு அசதியாய் இருந்தது. தலையும் பாரமாய்க் கனத்தது. தன்னால் இரவுக்கு சாப்பாடு தேட முடியாது என்பதை உணர்ந்தவளாய் பத்தே வயதான பாலகி இனியாவை பக்கத்துக் கடைக்கு பாண் வாங்குவதற்காய் அனுப்பி விட்டு வராந்தாவில் காத்திருந்தவள் களைப்பு மிகுதியால் கண்ணயர்ந்து விட்டாள். திடுக்கிட்டு விழித்தவள் எதிரே இருந்த சுவர்க்கடிகாரம் மணி எட்டைக் காட்டவே பதறித் துடித்துக் கொண்டு எழுந்தாள். மனதின் வேகத்திற்கு ஒத்துழைக்க மறுத்த உடலை வலுக்கட்டாயமாய் இயக்கியபடி கடையை நோக்கி விரைந்தாள். கடைக்கார அம்மாவோ மகள் வரவே இல்லையெனக் கைவிரித்தார். அழுது குழறியவளாய் அக்கம் பக்கமெல்லாம் ஓடியோடி விசாரித்தாள். ஊரே திரண்டு விடிய விடிய தேடியதன் பலனாய் ஊருக்குப் புறத்தேயுள்ள ஆற்றங்கரைப் பற்றையோரம் அலங்கோலப் படுத்தப்பட்ட அந்தப் பச்சை மண்ணை குற்றுயிரும் குலையுயிருமாய் தன் கரங்களில் அள்ளியெடுத்து வைத்திய சாலையில் சேர்த்தாள் கோமதி.

நடந்த கொடூரத்தைக் கேட்ட பார்வதிப் பாட்டி விக்கித்துப்போய் அமர்ந்திருந்தாள். மூச்சுவிடாமல் இத்துயரச் சம்பவத்தை விபரித்த கோமதி கணேசன் இருந்த திசைநோக்கி காறித்துப்பிவிட்டு கதறத் தொடங்கினாள். கணேசனின் போதைக்கு அடிமையான கூட்டாளிகளின் காமக்கைகளில் சிக்கித் தவிக்கையில் தன் மகள் எப்படித் துடித்திருப்பாள் என்பதை எண்ணி எண்ணி அவளது உடல் நடுங்கியது. தன் வயிற்றில் உதித்த வாரிசுக்கு நல்ல தகப்பனை வழங்க முடியாத தன் காதலை நினைத்து வருந்தினாள்.

'ஐயோ நான் இருந்திருந்தால் என்ர குஞ்சுக்கு இந்தக்கதி வந்திராதே..' எனத் தலையில் அடித்துக் கதறும் பார்வதிப் பாட்டியை ஒரு மார்க்கமாய்ப் பார்த்த கோமதியின் மனது 'நீ இங்கிருந்திருந்தால் உனக்கும் இந்த அவலம் வந்திருக்கும் எண்டு தானே வீட்டை விட்டு அனுப்பினன் அம்மா..' என மானசீகமாய் அரற்றியவாறு தாயாரை தன் வீட்டிலிருந்து தான் அனுப்புவதற்கு காரணமான அச்சம்பவத்தை மீளவும் அசைபோட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள் கணேசன் குளியலறை ஜன்னலோரம் நின்று எதையோ உற்றுப் பார்ப்பதைக் கண்ணுற்ற கோமதி 'என்னங்க..' எனக் குரல் கொடுக்கவும் ஒன்றுமில்லை எனக்கூறிக்கொண்டு கையில் வேலையிருப்பதாய் விலகிச்சென்றதை அவள் பெரிதுபடுத்தவில்லை. என்றாலும் சற்றுக் கழித்து மார்புக்குக் குறுக்கே கட்டிய துணியுடன் குளியலறையிலிருந்து வெளிப்பட்ட தாயாரைக் கண்டதும் மனசு சற்றுத் துணுக்குறவே செய்தது. பின்னர் ஒரு நாள் இரவில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு எழுந்து வந்த கோமதி தாயார் உறங்கிக் கொண்டிருக்க சற்றே விலகிய சேலையிலிருந்து வெளித் தெரிந்த உடலை வெறித்துப் பார்த்த வண்ணம் நிறை போதையில் அவரை நோக்கி நடந்து கொண்டிருந்த கணேசனைக் கண்டு வெலவெலத்துப் போனவள் கையோடு அவனை இழுத்து வந்து தனதறையில் கிடத்திவிட்டு அன்று காலையே ஏதேதோ சாட்டுச் சொல்லி தாயாரை வீட்டிலிருந்து அனுப்பி விட்டாள். இன்று வரை யாருமறியாது தன் மனதில் பூட்டி வைத்த நாற்றம் பிடித்த இந்த இரகசியத்தை எண்ணிப் பார்த்த வெறுப்பில் காறித் துப்பவதற்காய் கணேசன் இருந்த பக்கம் பார்வையை செலுத்திய போது அவ்விடம் வெறுமையாய் இருந்தது.

● ● ● ●



# மஞ்சரி சிறுகதைகள் ஒரு பார்வை

பேராசிரியர் செ. யோகராசா மஞ்சரி 29

## கம்பி இல்லா வீணை- தியா

கணவன் தன் மனைவியின் தங்கையுடன் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி உடலுறவு கொள்வதும் கருத்தரித்துக் குழந்தையைப் பெற்றெடுப்பதும் ஆன கரு பழையது. ஆனால் அவன் அவளைப் பழிவாங்குவது புதியதாகும். அதாவது பிறப்புச் சான்றிதழில் தகப்பனின் பெயரை வெற்றிடமாக விடுவதும் பிறந்த குழந்தை வளர்ந்து பல பிரச்சினைகளை எதிர் கொள்வதும் ஆணாதிக்கத்தினை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்துகின்றன. பாராட்டிற்குரியது. எனினும் இறுதிப்பந்தியைத் தவிர்த்திருக்கலாம்.

## கள்ளத்தோணி - சுரேந்திரன் தர்சித் ராகுல்

இக்கதை முற்றிலும் வித்தியாசமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கருவைக் கொண்டுள்ளது. இதில வரும் சாமி பிறப்பால் மலையகத் தமிழனாகவும் திருமணம் காரணமாக பௌத்தனாகவும் காணப்படுகிறார். இதனால் அவனுக்கும் அவனது குடும்பத்திற்கும் ஏற்படும் சிக்கல்கள் பல. எனினும் அவை தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை. மேலும் செதுக்கப்படும்போதுதான் அக்குறைபாடு தவிர்க்கப்படும். பாத்திர உரையாடல்கள் வீச்சான மொழியில் அமைந்திருப்பது பாராட்டிற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலசூட்சுமம் - அலெக்ஸ் பரந்தாமன்

சாதிப்பிரச்சினை வித்தியாசமான முறையில் அணுகப்பட்டுள்ளது. ஆனால் இக் கருப் பொருள் முன்னரும் பலரால் கையாளப்பட்டுள்ளது. இவ்வாறு பார்க்கும் போது கதையின் முடிவுப்பகுதிதான் வித்தியாசமாக அமைந்து கவனத்திற்குரியதாகிறது. இந்திரா என்ற பாத்திரத்தை மேலும் செதுக்கியிருக்கலாம்.

## பரிசு - கலாபூசணம் தம்பிலுவில் ஜெகா

ஆணாதிக்கத்தை இன்னொரு கோணத்தில் வெளிப்படுத்தும் இச்சிறுகதையின் முடிவு தெளிவானவிதத்தில் அமையவில்லை. எழுத்தாளரான தனது மனைவிக்கு சிறுகதைப் போட்டியில் பரிசு கிடைப்பதைக் கணவன் அவளிடம் கூறுகின்றான். அவள் அதனைப் பொருட்படுத்தவில்லை என்பது தான் 'கரு' எனில் அது கூர்மையான விதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின் நன்றாக விருந்திருக்கும்.

## செல்வம் - விமல்பரம்

கடை முதலாளி- தொழிலாளி உறவு சார்ந்து சிறுகதைகள் பல வெளிவந்திருப்பினும் இச்சிறுகதையின் நகர்வும் முடிவும் வித்தியாசமானதாக அமைந்திருப்பது பாராட்டத் தக்கது. முதலாளியின் மனமாற்றம் கதாசிரியரது திணிப்பாகவின்றி இயல்பான முறையில் பாத்திரத்தின் நடத்தையூடாக வெளிப்படுவதும் கவனத்திற்குரியது.

## நெஞ்சைத் தொடும் உண்மை- கமலினி கதிர்

கணவன்- மனைவிக்கிடையில் முன்நாள் காதலூடாக சந்தேகம் ஏற்படுவது பழைய கரு: மனைவி தற்கொலை செய்யாமலும் வீட்டைவிட்டுப் புறப்படாமலும் மனநல மருத்துவரது ஆலோசனைப்படி நடப்பது வித்தியாசமான முடிவு. என்றாலும் கூட இன்னும் செதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

## எல்லை மீறும் ஆசை - எம் எம் இப்றாகீம்

தமிழ்பேசும் சமூகத்தில் காணிச்சண்டை சகஜமான ஒன்றுதான் இதுபற்றிப் பேசும் இச்சிறுகதையின் முடிவில் பாத்திரத்தில் ஏற்படும் மனமாற்றமும் விட்டுக் கொடுப்பும் கதாசியரது திணிப்பாகவின்றி வித்தியாசமான உத்தியூடாக வெளிப்படுத்தப்படுவது கவனிக்கத்தக்கது. பாராட்டிற்குரியது.

## மேலதிக குறிப்பு:

தெளிவத்தை ஜோசப் பற்றி.
புனைகதைத் துறையில் இவரது தேடல்கள் வலுவானவை: வளமானவை ஒன்றை மட்டும் இவ்வேளை நினைவு கூறலாம். இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் பலவெனினும் அவை எதுவும் சிறந்த நாவலாக உருப்பெறவில்லை. மாறாக இவரது 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983' என்பது மிகச்சிறந்த நாவலாக பரணமித்துள்ளது. நேரடி வாக்குமூலமாகவும் வெளிப்பட்டுள்ளது. மலையக சிறுகதை, சஞ்சிகை தொடர்பான ஆய்வுகளும் முக்கியமானவையே!

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு. தயாளன்

## பாத்திரங்களும் அவை நோக்கிய பார்வைகளும்:

ஒவ்வொரு சிறுகதைக்கும் அதன் பாத்திரங்களே பிரதானமாகும். ஒரு புதிய வகையினதாகவும் நம்பக்கூடியதுமான பாத்திரங்கள் மிகமிக அவசியமாகும். இப்படி அமைக்கும்போதுதான் உங்களுடைய பாத்திரங்களை மற்றவர்கள் ரசிக்கவும் வாசிக்கவும் முனைவார்கள். இன்று நாங்கள் இந்தப் பாத்திரங்களைப்பற்றி கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

முதற்கண் பாத்திரங்கள் மாற்றமடையக் கூடியவையாக இருத்தல்வேண்டும் அதே நேரம் திரும்மத் திரும்ப ஒரே விடயத்தை பிடிவாதமாகக் கொள்பவையாகவும் இருத்தல் கூடாது என்ற அடிப்படையை ஏற்றுக் கொள்வோம்.

## பிற உயிர்களின் துன்பம் கண்டு வருந்தும் பாத்திரம் என்பது என்ன? (Sympathetic character)

இந்தப்பாத்திரம் இனிப்புப் பண்டமானது எப்போதும் இனிப்பது போன்றதான பாத்திரமாக இருக்கவேண்டிய அவசியமில்லை. உண்மையிலேயே இந்தப் பாத்திரம் உங்களின் வாசகர்கள் கவனமாகப் பார்த்துக் கொள்ளும் பாத்திரமாக இருக்கவேண்டும். இந்தப் பாத்திரம் எப்போதும் குழந்தைகள்மேல் அன்பு கொண்ட பாத்திரமாகவோ அல்லது முதியவர்களை கவனமாக அன்போடு பார்த்துக் கொள்ளும் பாத்திரமாகவோ இருக்கவேண்டிய கட்டாய மெதுவுமில்லை.

இந்தப் பாத்திரத்தை உருவாக்க ஆரம்பிக்க முன் உங்களின் கதையை யார் வாசிக்கப் போகிறார்கள்? அவர்களின் அடிப்படைக் குணாம்சம் என்ன என்பதுபற்றி நீங்கள் ஆய்வு செய்யவேண்டியது மிகமிக அவசியமாகும். ஏனென்றால் நீங்கள் உருவாக்குகின்ற இந்தப் பாத்திரத்தை யார் பாதுகாத்து ரசிக்கப் போகிறார்கள் என்பது உங்கள்முன் உள்ள தலையாய பிரச்சினையாகும்.

சிலவேளைகளில் நீங்கள் வடிக்கும் பாத்திரம் ஏழைகளைப் பார்த்து இரங்குகின்ற ஒரு பாத்திரமாக இருந்து அந்தக் கதையை வாசிப்பவர்கள் பெரும் பான்மையாக ஏழைகளுக்கெதிரான வர்களாக இருந்துவிட்டால் உங்கள் கதையின் நிலை அதோகதிதான்!. அந்தப்பாத்திரத்தை எவ்வித தயவுதாட்சண்யமுமின்றித் தூக்கி வீசிவிடு வார்கள். உங்களுடைய பாத்திரங்கள் எதிர் கொள்கின்ற அதேபிரச்சினையை உங்கள் முதல் வரிசையிள்ள வாசகர்களும் சந்தித்தவர்களாக இருக்கவேண்டும் அல்லது உங்களின் பாத்திரங்கள் உங்களின் வாசகர்களுக்கு அவர்களின் பிரச்சினைபோன்று தோன்றி ஒருவித மன உளைச்சலைக் கொடுக்கக் கூடியனவாக இருக்கவேண்டும்.

அடுத்த தடவை எப்படியான பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி வாசகர்களைக் கவரலாமென்பதைப் பார்ப்போம்.

( இன்னும் வரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI EDUCATION CENTRE
LEC

# ENROLLING NOW
2022 / 2023



REGISTER NOW

www.leconline.co.uk
0208 573 0368
07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org